

சேதமின்றி சலவை
செய்யப்பட்டது
அதோடு ஸன்லைட்டால்
வெண்மையாக்கப்பட்டது
—ஜாஸ்தி அழுக்குப்
படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகளில் பழக்கத்தால் சேதமடையுமிடங்களை கவனியுங்கள்! இவைதான் ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள். ஆடைகளை, சிறிது சோப்பைத்தேய்த்து தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைப்பதால் அதிகமாக கெட்டுப்போகக் கூடிய இடங்களும் இவையே.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுலபமாக இயக்கிற நுரை, நனைந்த துணியில் புகுந்திக் கசக்கினும் அதிகமாக அழுக்குப்படிந்துள்ள இடங்கள்கூட தூய வெண்மையாகிறது. இச்சுத்தமான சோப் உங்கள் துணிகளுக்கு தன்மையளிக்கிறது—அவைகளுக்கு இறகையொத்த அழகைக் கொடுக்கிறது. அன்றியும் உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறது.
இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
S. 90-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.



பூச்சிகள் நாசினியாகிய இது



அசல் DDT தயாரிப்பாகும்; பூச்சிகளை ஒழிக்கும் DDT தயாரிப்புகளை முதன் முதலில் உபயோகத்திற்குக் கொண்டு வந்தவரான ஜே. ஆர். கேய்கி என்பவரளித்துள்ள தயாரிப்பு முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது வீடுகளில் ஈக்கள், எறும்புகள், கரப்பான் பூச்சிகள், கொசுக்கள், விளக்குப் பூச்சிகள், வெள்ளைப்பாச்சா இவைகளின் தொல்லையை ஒழிப்பதற்குரியதாகும். 10-சத விகிதம் DDT கலந்துள்ள நியோஸிட் இப்பொழுது பவுடர் ஓத்தி சகிதம் 2-அவுன்ஸ் டப்பிகளிலும், ½-பவுண்டு டின்களிலும், 1-பவுண்டு டின்களிலும் கிடைக்கும். ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு 28-பவுண்டு டின்களிலும் கிடைக்கும்.

DDT Geigy DDT

நியோஸிட் முற்றிலும் பலனளிக்க வேண்டுமானால் வீட்டின் அறைகள் எல்லாவற்றிலும், முக்கியமாக சமையலறை உக்கிராணங்களிலும் அதை விடாமல் தூவி வரவேண்டும்; இலேசாகத் தூவினால் போதும். பவுடரை தூவி 3 அல்லது 4 தினங்களாவது அப்படியே போட்டிருக்க வேண்டும். தவறுதலாகத் தூத்து தள்ளப்பட்டுவிட்டால் மீண்டும் தூவ வேண்டும். உடனே பலனளிக்கவில்லையே யென்று அவசரப்படவேண்டாம். நியோஸிட் மெதுவாகத்தான் வேலைசெய்யும். ஆனால் பூச்சிகளை அது ஸ்திரமாக ஒழித்துவிடும். சில தினங்களில் அதன்பலன் தெரிந்துவிடும்.

நியோஸிட்டை

சரியானபடி உபயோகியுங்கள்!

கேய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிமிடெட் — Geigy — நேவில் ஹவுஸ், நிக்கல் ரோடு, பல்லார்டு எஸ்டேட், பம்பாய்

D.J.K. 5314 TM

விநியோகஸ்தர்கள்: மைசூர் சமஸ்தானத்திற்கும், வட சர்க்கார் ஜில்லாக்களுக்கும்: மெஸர்ஸ். மகமது ரஹீம் கனீ, 99-B, உஸ்மான் கான்ரோடு, பெங்களூர் சிடி.

தென்னிந்தியாவிற்கு: மெஸர்ஸ், அடிஸன் அண்டு கோ., லிமிடெட், மவுண்டு ரோடு, மதராஸ்.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்" வடக்கு பீச் ரோடு, மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்: எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 71,10,900
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 51,67,608
ரிசர்வ் நிதி	ரூ. 61,50,000

★


சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி



Platignum

இங்கிலாந்து தயாரிப்பு



உண்மைதான்! கான்பூரா, கெய்ரோ விலும் சரி—டென்னெண்ட் க்ரீக்கிலானாலும் சரியே—எத்தகைய சீதோஷ்ண நிலையிலும் நீண்ட காலம் தவக்கமில்லாது வழவழப் பாகவே எழுதுகின்றன. ப்ளாட்டினம் பேனாக்கள் மிகவும் நாணயமான வியாபாரிகளிடமும் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

விலை ரூ. 3. I

வியாபார விபரத்தினைகளுக்கு கீழ்க்கண்ட பூரண உரிமையாளர்களுக்கு எழுதவும்:

முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்

குவீன்ஸ் மான்ஷன்ஸ், பாஸ்டியன் ரோடு, பம்பாய்

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 34 — 1947 மார்ச் 23 — வியய | பங்குனி 10

என்ன செய்தி?	...	...	7
புது வைஸ்ராய் வரவு	சாஸ்திரி	...	9
சர்வதேசப் புதிர்	...	...	11
சோலைமலை இளவரசி	கல்கி	...	14
நை சீமாட்டியின் தொண்டு (அட்டைப் படம்) ...		...	20
அக்கப்போர்	"சக்கைப்போடு"	...	21
நவகாளிக் காட்சிகள் (படங்கள்)	கே. நடராஜன்	...	24
பாப்பா மலர்	ராஜி	...	27
வான சஞ்சாரம்	இசைத்தேனீ	...	31
இடம் கிடைத்தது!	பி. எஸ்.	...	33
வாழ்க்கைத் தத்துவம்	ரா. விழிநாதன்	...	38
காலக்ஷேபம்	...	...	39
வைர விழாக் காட்சிகள்	...	...	40
லங்கேசுரன், அவன்!	டி. கே. சி.	...	43
கிளிவிடு தூது	வேங்கடலக்ஷ்மி	...	46

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

விவாக காலங்களுக்கும்
உல்லாசமாக உடுப்பதற்கும்
பரிசளிப்பதற்கும் ஏற்ற

உயர்ந்த ரக அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள் எம்மிடம் கிடைக்கும். உங்கள் தேவைக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

★

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(பட்டு ஜவுளி வியாபாரம்)

1/14, ஸன்னதித் தெரு, மயிலாப்பூர் : சென்னை

போன்: 84188

பிராஞ்சு: பெரிய தெரு :: கும்பகோணம்



ஜூபிடர்ஸ்
ராஜகுமாரி
(கற்பனைச் சித்திரம்)
K. மாலதி · K. தவமணி தேவி
M.S. பாக்கியம் · T.S. பாலையா
M.G. ராமச்சந்திரன் · M.R. சுவாமிநாதன்
M.N. நம்பியார் · புளிமூட்டை
M.E. மாதவன்
டைரக்ஷன்: A.S.A. சாமி B.A. (Hons)
பாட்டு: நாராயணகவி
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ்

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 34

என்ன சேதி?

நிர்வாக இலட்சணம்

சென்னைப் பிரகாசம் சர்க்கார் ஊழல்களிலே கடைசியாக வெளியாகியிருக்கும் ஊழல் இதற்கு முந்திய ஊழல்களையெல்லாம் தூக்கியடிப்பதாக இருக்கிறது.

இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக் கேள்வித் தாள்கள் எல்லாம் அடங்கிய புத்தகம், மேற்படி பரீட்சை ஆரம்பமாவதற்குப் பல நாட்கள் முன்பாகவே சென்னை சைனபஜாரில் இரண்டணா விலைக்கு விற்பனைக்கு வந்து விட்டதாம்! சென்னை நகரத்தில் மாத்திரம் அல்ல, இந்த மாகாணத்திலே எங்கெங்கெல்லாம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை நடக்குமோ அங்கெல்லாம் இந்தக் கேள்விகள் வெளியாகி, மாணவ உலகம் முழுவதும் ஒரே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், சென்னை சர்க்காருக்கு மாத்திரம் ஏனோ இச்செய்தி எட்டவில்லை? மாணவர்கள் இரண்டு பரீட்சைகள் எழுதியான பிறகு, சாவதானமாகத் தங்கள் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து, "அப்படியா சமாசாரம்? இதோ ரத்து செய்கிறோம் பரீட்சைகளை!" என்று பரீட்சைகளையெல்லாம் நிறுத்தி வைக்கும்படியாக ஹைஸ்கூல்களுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

இந்த ஊழலைப் பற்றிச் சர்க்கார் விசாரணை நடைபெறப் போகிறதாம். நடக்கட்டும், நடக்கட்டும்! விசாரணை நன்றாய் நடக்கட்டும். சர்க்கார் விசாரணைகளின் பரம்பரை வழக்கத்தை யொட்டி உண்மைப் பொறுப்பாளிகளான பெரிய உத்தியோகஸ்தர்களை விட்டுவிட்டு, யாராவது குமாஸ்தாவையோ, பியூனையோ, அச்சாபீஸ் கம்பாஸிடரையோ, பிடித்துக் கழுவில் ஏற்றட்டும்.

ஆனால் 48,000 மாணாக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏமாற்றத்துக்கும் மனத் தொல்லைக்கும் பணச் செலவுக்கும் என்ன பரிகாரம்? ஒரு மாதம் கழித்து மறுபடியும் பரீட்சை வைத்து அவர்களுடைய பிராணனை வாங்குவது என்ன நியாயம்? அவ்வளவு பேரையும் பள்ளிக்கூடத்தில் ஏற்கெனவே வாங்கியிருக்கும் மார்க்குகளை யொட்டிப் பாஸ் போட்டு விட்டால் என்ன முழுகிப் போய்விடும்?

பதற வேண்டாம்!

"திவான் சாகேப், கொஞ்சம் பொறுங்கள்! அவசரப்பட வேண்டாம்! பதறுகிற காரியம் சிதறுகிறது அல்லவா? நீங்கள் கோபித்துக் கொண்டால் அப்புறம் இந்தியாவின் கதி என்ன ஆவது?"

இந்தமாதிரியாகத் திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறோம்.

கொஞ்ச நாளைக்கு முன்பு ஜனாப் சுஹ்ரவர்த்தி வங்க சட்டசபையில் பேசும்போது, "எதிர்காலத்திலே இந்தியாவில் எத்தகைய அரசியலமைப்பு ஏற்பட்டாலும் சரி, அதைப் பற்றிக் கவலையே இல்லை. வங்காளம் நிச்சயமாக சுதந்திரமாகவே இருக்கும்" என்று சுதந்திர முழக்கம் செய்தார். நம்முடைய ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அதைப் பக்கத்திலே இருந்து கேட்டுக் கொண்டிருந்தவர் போல, திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பற்றிச் சொல்லியிருப்பது சுவாரஸ்யமாக இருக்கிறது. "வானமே கவிழ்ந்தாலும், பூமியே இடிந்தாலும் 1948-ம் வருஷம் ஜூலை மாதம் 1ம் தேதியிலிருந்து திருவாங்கூர் சமஸ்தானம் சுதந்திர நாடாகிவிடும்" என்பதாகச் சுதந்திர பேரிகை முழக்கியிருக்கிறார்.

நன்றாக வாழ முடியும்!

திருவாங்கூர் சமஸ்தானம் மேற்படி சுதந்திரத்துக்கு அருகதையானதுதான் என்பதை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டுவதற்காக, ஸர் ஸி. பி. உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள நாடுகளை யெல்லாம் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். சின்னஞ் சிறிய பெல்ஜியம், நார்வே, ஸ்விஸர்லந்து முதலிய நாடுகள் எல்லாம் சுதந்திரமாக வாழும்போது, திருவாங்கூர் சமஸ்தானம் மாத்திரம் ஏன் சுதந்திரமாக வாழ முடியாது என்று அவர் கேட்கிறார்.

திவான் சாகேப், ஏன் சுதந்திரமாக வாழ முடியாது? நன்றாக வாழ முடியும்.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் சுதந்திரத்திலோ அல்லது வேறு எந்த சமஸ்தானத்தின் சுதந்திரத்திலோ தலையிட வேண்டும் என்ற நோக்கம் யாருக்குமே இல்லை. ஆனால் திருவாங்கூர் சமஸ்தானமோ வங்காளமோ இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து ஒரேயடியாகப் பிரிந்து வந்து, தங்கள் நாட்டைச் சுற்றி ஒரு சீக்பிரிட் அரண் கட்டிக்கொண்டு ஏகபோக ராஜ்யமாக வாழவேண்டும் என்ற ஆசை இருக்கிறதே, அதுதான் பயங்கரமானது; ஆபத்தான விஷயம். அந்த ஆபத்தும் பயங்கரமும் அவர்களுக்குத்தானே யொழிய இந்தியாவுக்கு அல்ல. இந்தியாவை விட்டுப் பிரிந்து தனி ராஜ்யம் நடத்தினால், அதனால் ஏற்படும் கஷ்டம் அவர்களுக்குத்தானே யொழிய இந்தியாவுக்கு அல்ல.

யாருக்கு நஷ்டம்?

சென்ற வருஷம் நாடெங்கும் உணவுப் பஞ்சம் கடுமையாக இருந்தது. திருவாங்கூரிலோ ரொம்ப ரொம்பக் கடுமையாக இருந்தது. திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. கடைசியில் டில்லிக்குப் போனார். உணவு மந்திரி ராஜன் பாபுவிடம் உதவி வேண்டினார். மற்ற மாகாணங்களின் கோரிக்கைகளைக்கூட லட்சியம் பண்ணாமல் ராஜன் பாபு திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு உதவி செய்யாமல் இருந்திருந்தால், திருவாங்கூர் சமஸ்தானம் அந்த உணவுப் பஞ்சத்தைச் சமாளித்திருக்க முடியாது என்பது நிச்சயம்.

இது ஒருபுற மிருக்க, சென்ற நாலு வருஷ காலமாக, ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், "பாகிஸ்தான் யோசனை கூடவே கூடாது!" என்றும், "பாரத தேசத்தைப் பிளக்கவே கூடாது!" என்றும், அப்படி இந்தியாவை யாராவது பிளக்க முன் வந்தால் அவர்களுடன் போராடத் தாம் முன்னணியில் நிற்பார் என்றும் சொல்லி வந்தது நேயர்களுக்குத் தெரியும். முக்கியமாக, ராஜாஜி—காந்திஜி திட்டத்தை ஸர் ஸி. பி. சக்கைப்போடு போட்டுச் சண்டமாருதக் கிளர்ச்சி செய்தார். இப்போது அவரே "திருவாங்கூர் பூரண சுதந்திர நாடாகப் போகிறது!" என்கிறார். திருவாங்கூரைப் போலவே மற்று முள்ள 600 சுதேச சமஸ்தானங்களும் சுதந்திரமாக இருக்க விரும்பினால், இந்தியாவை 600 பங்குகளாகப் பிரிப்பது ஆகாதா? போன வருஷம் இந்தியாவை மூன்றாகப் பிரிக்கக் கூடாது என்றவர் இப்போது 600 துண்டங்களாகச் செய்ய மனம் இசைந்தது எப்படி? — "அரசியல் பித்தலாட்டம்" என்று சொல்வது இம் மாதிரி முரண்பாடுகளைத்தான் போலும்!

★ கல்கி வாரப் பதிப்பு ★

இந்தியா & சிலோன்

வருஷச் சந்தா	...	ரூ.	13—0—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	6—8—0
தனிப் பிரதி	...	அணா	0—4—0

வெளி நாடு


வருஷச் சந்தா	...	ரூ.	16—4—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	8—2—0
தனிப் பிரதி	...	அணா	0—5—0


குறிப்பு:

சந்தா நேயர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போது, தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவும்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை.

புது வைஸராய் வரவு


இன்னும் 445 நாட்கள்
தான் பாக்கி;
நீங்கள் தயா
ராகி விட்டீர்
களா?
ஆகாய விமான
நிலையம்
(டில்லி)
வைக்கவுண்ட்
மவுண்ட் பேட்டன்


துச்சாதனன்:—
அண்ணா! நம்முடைய காலத்தில் நாமும்தான் பாண்டவர்களை ஒழித்து விடப் பார்த்தோம். ஆனால் கலி காலத்து மனிதர்கள் நம்மை மிஞ்சி விட்டார்களே!
துச்சாதனன்
துரியோதனன்
பாஞ்சால கோரக் காட்சி


ஒரு சர்வ தேசீய லஞ்சக் கேஸ்
கிரீஸ்
ட்ரூமன்

சர்வ தேசப் புதிர்

"அமெரிக்கத் துருப்புகள் புறப்படப் போகின்றன."

"உலகிலேயே பிரமாத பலம் பொருந்திய இரு வல்லரசுகளுக்குள் யுத்தம் ஏற்படலாம்."

"அமெரிக்கா அதிக அணுகுண்டு உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது."

"மத்தியக் கிழக்குப் பிரதேசங்களுக்கு அமெரிக்கா யுத்தக் கப்பல்களை அனுப்ப உத்தேசித்திருக்கிறது."

"ருஷ்யாவுக்கு அமெரிக்காவின் எச்சரிக்கை!"

"அமெரிக்காவுக்கு ருஷ்யா சூடு!"

சென்ற சில தினங்களாகப் பத்திரிகைத் தலைப்புகள் மேற்கூறிய விதம் அலறி வருகின்றன.

அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் பல மாதங்களாகப் புகைந்து கொண்டிருந்த தகராறு, சென்ற வாரம் திடீரென்று ஜ்வாலையைக் கக்க ஆரம்பித்திருக்கிறது.

பத்திரிகைகளின் மேற்படி. நடபுடலான தலைப்புகளுக்குக் காரணம் அதுதான்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் சென்ற வாரம் அமெரிக்கக் காங்கிரஸில் பேசியபோது, ருஷ்யா அமெரிக்காவின் ஜன்ம விரோதி என்பதை உலகம் அறிய ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ட்ரூமனின் பேச்சு உலகம் முழுதும் பெரும் கொந்தளிப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

ஏனெனில், சென்ற கோர யுத்தத்தால் பீறிட்ட உதிர வெள்ளம் இன்னும் காய்ந்தபாடில்லை. உணவுப் பொருள்களின் பஞ்சமோ உலகையே வாட்டி வருகிறது. விலைவாசிகளின் உயர்வால் சமுதாய அமைப்பே சீர்குலைந்து தத்தளிக்கிறது.

சென்ற யுத்தத்தால் ஏற்பட்டுள்ள சகிக்க முடியாத சங்கடங்கள் தீர்ந்து சமூகம் மீண்டும் உய்வது எக்காலமோ என்ற நிலைமை இருந்து வருகையில், மற்றொரு யுத்தம் வரப்போகிறதென்று பத்திரிகைகளும் பிரமுகர்களும் கூறுவதைக் கண்டு உலகம் திடுக்கிடாமல் என்ன செய்யும்?

* * *

அமெரிக்க ஜனாதிபதி நிகழ்த்தியுள்ள பிரசங்கத்தின் சாரம் இதுதான்:

"உலகிலுள்ள பல நாடுகளின் சுதந்திரத்துக்கும் இன்று ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டனுக்குத் தன் சொந்தக் கவலை பெரிதாகிவிட்டதால், அந்த நாடுகளுக்கு பிரிட்டன் உதவியளிக்கக் கூடிய நிலைமையில் இல்லை. எனவே, அந்தப் பொறுப்பு இப்போது நம் தலையில் சுமந்திருக்கிறது. பல நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி முறையைத் திணிக்க சதி முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கு இணங்க அமையும் அரசாங்கங்களை அதோகதியாக்குவதற்காக ஆயுதந் தாங்கிய சிறுபான்மையோர் ஜனநாயகத்துக்கு நேர் விரோதமான அட்டூழியங்களைச் செய்து வருகிறார்கள். நாம் அத்தகைய அட்டூழியங்களை வளரவிடக் கூடாது. வெளியாரின் தலையீட்டையும் ஆயுதந் தாங்கிய சதிகாரர்களான சிறுபான்மையோரின் பாதகச் செயல்களையும் எதிர்த்துக் கண்ணியமாக விரப் போர் நடத்திவரும் பெரும்பான்மையோருக்கு உதவி செய்வதே அமெரிக்காவின் கொள்கையாக இருக்க வேண்டும். சுதந்திர நாடுகள், தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள அமெரிக்காவின் உதவியையே நாடி வருகின்றன." — இவ்வாறாக ட்ரூமன் பேசியிருக்கிறார்.

வெளியாரின் தலையீட்டைத் தடுக்கப் பாதுகாப்பளிப்பதற்காக கிரீஸ், துருக்கி இவ்விரு நாடுகளுக்கும் 40 கோடி டாலர் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்றும் ட்ரூமன் அமெரிக்கக் காங்கிரஸைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இது மாத்திரமல்ல. அவ்விதம் மற்றும் பல நாடுகளுக்குமாக மொத்-

தம் 575 கோடி டாலர் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்பதும் ட்ருமனின் திட்டமாகும்.

இதெல்லாம் எதற்காக?

ஜனநாயகத்தையும் உலக நாடுகளின் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக என்று ட்ருமன் கூறியிருக்கிறார்.

* * *

"உன் நண்பன் யார் என்பதைச் சொல்லு; உன்னுடைய குண விசேஷங்களையெல்லாம் நான் அறிந்து கொண்டு விடுகிறேன்" என்று ஒரு புத்திமான் கூறினானாம்.

அதுபோலவே அமெரிக்க ஜனாதிபதியின் பிரகடனத்தை யார் யார் ஆதரிக்கிறார்கள் என்பதைக் கொண்டு அதன் தராதரத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

ட்ருமனின் அறிக்கையைச் சர்ச்சில் பரவசத்துடன் வரவேற்றிருக்கிறார்!

கடந்த யுத்தத்துக்கு முன்பே அமெரிக்கா அவ்வாறு பிரகடனம் செய்திருந்தால் மேற்படி யுத்தம் ஏற்பட்டே இராதாம். 1914-ம் வருஷத்துக்கு முன்பே அமெரிக்கா அவ்விதம் பிரகடனம் செய்திருந்தால், உலகில் மகா யுத்தம் என்பதே ஏற்பட்டிராதாம். எங்கு பார்த்தாலும் பாலும் தேனும் வழிந்தோடிக் கொண்டிருக்கும் என்றும் சர்ச்சில் கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் ட்ருமன் அறிக்கைக்குக் கன்சர்வேடிவ்கள்தான் ஏகமனதாக நதாஸ்து கூறியிருக்கிறார்கள்.

ஆனால், தொழிற் கட்சியினரில் பலரும் ட்ருமன் அறிக்கையைக் கண்டித்தே பேசியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்திலும் உலக நாடுகளின் சுதந்திரத்திலும் கன்சர்வேடிவ் கோஷ்டியினருக்கு எக்காலத்திலும் இம்மியளவாவது சிரத்தை இருந்ததில்லை.

அப்படியிருக்க அவர்கள் ட்ருமனின் பிரகடனத்தை ஆதரிக்கிறார்களென்றால், அதைப் பற்றி என்ன நினைப்பது?

* * *

பாரெங்கும் பரவி வரும் பொதுவுடைமைப் பயங்கரத்தைச் சுதந்திர நாடுகள் எதிர்த்துப் போராடவே, அந்த நாடுகளுக்குத் தாம் உதவி புரியத் தீர்மானித்திருப்பதாயும், அவ்விஷயத்தை ஐக்கிய நாடுகளின் தீர்ப்புக்கு விடுவதாயின் காலதாமதம் ஏற்பட்டுக் குடி கெட்டுவிடுமென்றும் ட்ருமன் தவிக்கின்றார்.

எனினும், ஐக்கிய நாடுகளின் சபையில் கொண்டு வரக்கூட அவகாசம் இராதவாறு நிலைமை அவ்வளவு தூரம் முற்றி விட்டதாக அமெரிக்கத் தலைவர் நடபுடல் செய்வதை உலகம் நம்புவது கஷ்டமான காரியந்தான்.

தவிர, உலக அமைதியின் வாழ்வுக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ காரணமாக இருக்கக் கூடிய அவ்வளவு பிரமாதமான ஒரு முக்கிய விஷயத்தை, உலக சபை முன் கொண்டுவர வேண்டியதுதான் நியாயமாகும். அவ்விதமின்றேல், அது ஐக்கிய நாடுகளின் மூலக் கொள்கைக்கே முரணாகும் என்பதுடன், ஐக்கிய நாடுகள் மகாசபை இருந்தும் இராததும் ஒன்றுதான் என்ற விபரீதத்துக்கும் இடம் ஏற்பட்டுவிடும். அதன் விளைவாக, முன்னர் சர்வ தேச சங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இப்போது ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஏற்பட்டு விடலாம்.

உலக அமைதியைப் பாதுகாப்பதற்கென்றே மேற்படி சபை ஜனனமாயிற்று. எனவே, உலக அமைதியில் அவ்வளவு அக்கரை கொண்ட அமெரிக்க ஜனாதிபதி மேலே கூறிய முக்கியப் பிரச்னைக்கு அச் சபையின் மூலமே பரிகாரம் தேடுவதுதான் நேர்மையாகும்.

ஒரு வேளை மேற்படி பிரச்னை ஐக்கிய நாடுகளின் விவாதத்துக்கு வந்து விட்டால், ஜெனரல் ஸ்மட்ஸின் விவகாரம் சந்தி சிரித்தது போன்று ஆங்கிலோ அமெரிக்க ஆதிக்க ஆசையும் அம்பலமாகி விடுமோ என்று அஞ்சி ட்ருமன் மேற்கூறிய குறுக்கு வழியைக் கைக்கொண்டிருக்கலாம்!

எந்தத் தேசமாயினும் அதில் வெளியார் தலையிடக் கூடாது. வெளியாரால் தூபம் போடப்பட்டுச் சிறுபான்மையோர் ஜனநாயகத்தின் அடிப்படையான பெரும்பான்மையோர் ஆட்சியைப் பாழாக்கக் கூடாது. மேற்படி தர்மத்தை நிலை நிறுத்தி உலக அமைதியைக் காப்பதே தமது கடமையென ட்ருமன் பறைசாற்றியிருக்கிறார்.

உலக அமைதி, சர்வதேச நீதி, மானிட வர்க்கத்தின் க்ஷேமம் முதலி

யன மேற்படி தர்மம் தழைத்தோங்குவதையே பொறுத்திருக்கிறது என்பது முக்காலத்தும் உண்மைதான்.

ஆனால், உண்மையிலேயே அமெரிக்கா அந்தத் தர்மத்தை அந்தரங்க சுத்தியுடன் நிலை நிறுத்த முற்பட்டிருக்கிறதா?

'ஆம்' என்று அமெரிக்க அதிகார வர்க்கம் சொல்லுமாயினும், நம் கண் முன்னால் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் அக் கூற்றைப் பொய்ப்பிப்பதாக இருக்கின்றன.

உதாரணமாக, இன்று இந்தோனேஷியாவில் வெளியாரின் (டச்சுக்காரர்களின்) அட்டூழியங்கள் சகிக்க முடியாதனவாக இருந்து வரவில்லையா? யாருடைய க்ஷேமத்தை உத்தேசித்து அங்கு சென்ற சில மாதங்களாக உதிர வெள்ளம் ஓடி வருகிறது?

இந்தோ சீனாவில் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் இன்னும்கூட சாகா வரம் பெற்றிருப்பதேன்?

கோவாவில் போர்ச்சுகலின் பயங்கர ஆட்சி நடை பெற்று வரவில்லையா?

தென் ஆப்பிரிக்காவில் குடியேறிய சிறுபான்மையோரான வெள்ளையர்கள், அத் தேசப் பிரஜைகளும் பெரும்பான்மையோருமான ஆப்பிரிக்கர்களை மிருகங்களைப் போல் நடத்தவில்லையா?

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து ஐக்ய நாடுகளின் சபையில் நிறைவேறிய தீர்மானத்தின் கதி என்ன? உலக அமைதியின் 'ரக்ஷகரான' ட்ருமன் அவ்விஷயமாக என்ன செய்யப் போகின்றார்? அத் தீர்மானம் நிறைவேறிய பின்னர்தான், அங்கு இந்தியர்களின் நிலைமை இன்னும் அதிகமாகப் படுமோசமாகி வருகிறது.

மற்றும் கிரீஸ், எகிப்து முதலிய தேசங்களில் இன்னும் பிரிட்டிஷ் ஆதிக்கம் இருந்து வரவில்லையா? உண்மையிற் கிரீஸ் நிலைமை இவ்வளவு தூரம் சீர் குலைந்ததற்குக் காரணம், பிரிட்டிஷார் அங்கு தங்களுடைய ஆதிக்கத்தை ஸ்தாபிக்க முற்பட்டதுதான்.

இவ்வாறாக, பல நாடுகளின் சுதந்திரமும் கண்ணெதிரே பறிக்கப்பட்டு வரும் பகற் கொள்ளையைக் கவனியாத ட்ருமன், ஏதோ எதிர்காலத்தில் வரவிருக்கும் ஒரு பூச்சாண்டியை எதிர்த்துப் போராடுவதற்காகக் கோடிக்கணக்கான தொகையைக் கொட்டுகிறேன், பார் என்று சவால் விடுத்திருப்பதை ஒரு பெரும் சர்வதேசப் புதிர் என்றே கூறவேண்டியிருக்கிறது.

எனவே, ட்ருமன் திட்டத்தின் நோக்கம், அமெரிக்காவின் உலகை ஆதிக்க ஆசையே என்று ருஷியப் பத்திரிகைகளும் மற்றவர்களும் வியாக்கியானம் செய்வதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

ட்ருமனின் திட்டம் அமெரிக்கர்களிடையேயும் பெரும் திகைப்பையே உண்டுபண்ணியிருக்கிறது.

"அட, கஷ்டகாலமே! இதற்காகத் தானா நாம் ருஷியாவுக்காகவும், இதர நாடுகளுக்காகவும் கோடானு கோடிக் கணக்கான தொகையைக் கொட்டிக் கொடுத்தோம்? ருஷியாவும் ஜெர்மனியும் அடித்துக் கொண்டு சாகட்டும் என்று அமெரிக்கா பேசாமல் இருந்திருக்கலாமே? ருஷியாவுக்கு உதவியாகக் கோடிக் கணக்கான தொகையைக் கொடுத்து விட்டு, இப்போது ருஷியாவை எதிர்ப்பதற்காக மீண்டும் கோடிக் கணக்காக ஏன் அழவேண்டும்?" என்று வேலண்ட் புருக்ஸ் என்ற பிரமுகர் அமெரிக்க செனேட் சபையில் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்.

ருஷியாவிலோ, ட்ருமன் அறிக்கை உலக அமைதிக்கே பங்கம் விளைவிக்கக் கூடியதென்றும், சர்ச்சிலின் கோஷ்டியில் ட்ருமனும் ஐக்கியமாகி விட்டாரென்றும் அபிப்பிராயம் நிலவி வருகிறது.

எது எப்படியாயினும், ட்ருமனின் பிரகடனம் ஒரு விஷயத்தில் அவருக்கு மிகுந்த பெருமையைக் கொடுக்கலாம்.

அதாவது, இந்தியா, இந்தோ சீனா, இந்தோனேஷியா முதலிய நாடுகளின் க்ஷேமத்தில் அமெரிக்க ஜனாதிபதியான ட்ருமனுக்கு இராத அக்கறை கிரீஸ், துருக்கி முதலிய நாடுகளின் க்ஷேமத்தில் திடீரென ஏற்பட்டு விட்டதென்று கூறுவதற்கில்லை. எனவே, ட்ருமன் அதைக் குறித்துப் பெருமையடைய முடியாது.

ஆனால், அடுத்த மகா யுத்தத்துக்கு முதன் முதலாக விதை விதைத்த பெருமை அமெரிக்கா அதிபரான ட்ருமனுக்கு ஏற்படலாம்.

சோலைமலை இளவரசி

கல்கி



15. கைமேலே பலன்

இத்தனை நேரமும் கனவு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த குமாரலிங்கம், பொன்னம்மாள் "போய் வாரேன்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டதும், இவ்வுலகத்துக்குத் திடும் என்று வந்தான். "போகிருயா? எங்கே போகிருய்?" என்று கேட்டுக் கொண்டே பொன்னம்மாளின் கரங்களைப் பிடித்துக் கீழே விழுந்து கிடந்த பழைய அரண்மனைத் தூண் ஒன்றின் பேரில் அவளை உட்கார வைத்தான்.

"நான் சீக்கிரம் போகா விட்டால் சின்னுயி என்னை வெட்டி அடுப்பிலே வைத்து விடுவாள்! அந்த காங்கிருஸ்காரர்களும் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிருர்கள். உன் பெயரைச் சொல்லி ஊரெல்லாம் தமுக்கு அடித்துத் தண்டோராப் போடுவானேன்? நீயே போய் ஆஜராகிவிடு! அதோ கிராமச் சாவடியும் இலுப்ப மரமும் தெரிகிறதல்லவா? அங்கே தான் எங்கள் வீடு இருக்கிறது. நான் ஊருணியில் குளித்து விட்டுச் சற்று நேரம் சென்ற பிறகு வருகிறேன்" என்ருள் பொன்னம்மாள்.

"அதெல்லாம் ரொம்ப சரி; அப்படியே செய்யலாம். ஆனல் என்னுடைய பாட்டை மட்டும் இப்போதே நீ கேட்டுவிட வேண்டும். கேட்டு விட்டு உடனே போய்விடலாம்!" என்ருன் குமாரலிங்கம்.

"சரி, படிக்கிற பாட்டைச் சீக்கிரம் படி!" என்ருள் பொன்னம்மாள்.

குமாரலிங்கம் அவ்விதமே தான் கவனம் செய்திருந்த பாட்டைப் பாடிக் காட்ட ஆரம்பித்தான்:—

பொன்னம்மாள் ரொம்பப்
பொல்லாதவள்—அவள்
பொய் என்ற வார்த்தையே
சொல்லாதவள்
சொன்னத்தைச் சொல்லும்
கிளியினைப்போல்—என்றும்
சொன்னதையே அவள்
சொல்விடுவாள்!

மன்னர் குலம் தந்த
கன்னியவள்—இந்த
மாநிலத்தில் நிகர்
இல்லாதவள்
அன்னம் அவள் நடை
அழகு கண்டால்—அது
அக்கணமே தலை
கவிழ்ந்திடுமே!

பாடும் குயில் அவள்
குரல் கேட்டால்—அது
பாட்டை மறந்து
பறந்திடுமே!
மாடும் மரங்களும்
அவளுடைய—உயர்
மாட்சிமைக்கு வலம்
வந்திடுமே!

கூந்தல் முடிப்பிலே
சொருகுடையாள்—விழிக்
கோணத்திலே குறு
நகை யுடையாள்!—அவள்
மாந்தளிர் மேனியைக்
கண்டவர்கள்—அந்த
மாமரம் போலவே
நின்றிடுவர்!

கற்பக மலர்களோ
அவள் கரங்கள்—அந்தக்
கண்களில் தானென்ன
மந்திரமோ?
அற்புதமோ ஒரு
சொப்பனமோ?—இங்கு
ஆர் அறிவார் அவள்
நீர்மை யெல்லாம்!

பொன்னம்மாள் மிகப்
பொல்லாதவள்—அவள்
பொய்சொல்லக் கொஞ்சமும்
அஞ்சாதவள்!
அன்னம் படைக்கவே
வந்திடுவாள்—எனில்
அமுது படைத்து
மகிழ்ந்திடுவாள்!

ஆனதால் என் அரும்
தோழர்களே—நீங்கள்
அவளை மணந்திட
வந்திடாதீர்! ***''

இத்தனை நேரம்வரை மேற்படி பாடலை முரண்பட்ட உணர்ச்சிகளோடு கேட்டு வந்தாள் பொன்னம்மாள். பாட்டிலே இருப்பது பாராட்டா, பரிகாசமா என்று அவளுக்கு நன்றாய்த் தெரியவில்லை. ஒரு சமயம் புகழ்வது போலிருந்தது; இன்னொரு சமயம் கேலி செய்வது போலவும் இருந்தது. ஆனால் கடைசி வரிகள் இரண்டையும் கேட்டதும், பாட்டு முழுதும் பரிகாசந்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டுக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"சே! போ! போதும், உன் பாட்டு! எவன் என்னைக் கண்ணாலம் செய்து கொள்ள வரப் போகிறான் என்று நான் காத்துக் கிடக்கிறேனாக்கும்!" என்று சீறினாள் பொன்னம்மாள்.

"பொன்னம்மா! இன்னும் இரண்டே இரண்டு வரிதான் பாட்டில் பாக்கி இருக்கிறது. அதைச் சொல்லட்டுமா, வேண்டாமா? அதற்குள் கோபித்துக் கொண்டு விட்டாயே?" என்றான் குமாரலிங்கம்.

"சரி! அதையுந்தான் சொல்லி விடு!" என்று பதில் வந்தது.

குமாரலிங்கம் முதல் இரண்டு வரிகளையும் சேர்த்துப் பாட்டைச் சொல்லி முடித்தான்:—

"ஆனதால் என் அரும்
தோழர்களே—நீங்கள்
அவளை மணந்திட
வந்திடாதீர்!
ஏனென்று கேளுங்கள்
இயம்பிடுவேன்—இங்கு
யானே அவளை
மணந்து கொண்டேன்!"

கடைசி இரண்டு வரிகளைக் கேட்டதும் பொன்னம்மாள் தன்னை யறியாமல் கலீர் என்று நகைத்தாள். உடனே வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். திரும்பவும் குமாரலிங்கத்தை எதிரிட்டு நோக்கி, "மாறனேந்தல் மகாராஜாவாயிருந்தால் இந்த மாதிரி யெல்லாம் கண்ணாபின்னா என்று பாடுவாரா? ஒரு நாளும் மாட்டார்!" என்றாள்.

* * *

பல தடங்கல்களுக்கும் தயக்கங்களுக்கும் பிறகு பொன்னம்மாள் குமாரலிங்கத்திடம் விடை பெற்றுக் கொண்டு பிரிந்து சென்றபோது மிக்க குதூகலத்துடனேயே சென்றாள்.

அந்தப் பாழடைந்த கோட்டையில் காலடி வைத்தவுடனே அவளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களும் பயங்களும் அங்கிருந்து திரும்பிச் சென்றபோது அவளை விட்டு நீங்கியிருந்தன.

குமாரலிங்கத்தின் பாடலில் அவளுடைய ஞாபகத்தில் இருந்த சில வரிகளை வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டே போனாள்.

ஊருணியில் போய்ச் சாவகாசமாகக் குளித்தாள். பின்னர் வீட்டை நோக்கிக் கிளம்பினாள். போகும் போது, இத்தனை நேரம் குமாரலிங்கத்தேவர் தன் வீட்டுக்குப் போயிருப்பார், அவரை இப்படி உபசரிப்பார்கள் அப்படி வரவேற்பார்கள் என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டு சென்றாள். அவரைக்

குதிரை சாரட்டில் வைத்து ஊர்வலம் விட்டாலும் விடுவார்கள், ரோஜாப்பூ மாலையும் செவந்திமலர் மாலையும் பச்சை ஏலக்காய் மாலையும் அவருக்குப் போடுவார்கள். இன்று சாயங்காலம் இலுப்ப மரத்தடியில் மீட்டிங்கி நடந்தாலும் நடக்கும் என்று சிந்தனை செய்து கொண்டு உல்லாசமாக நடந்து சென்றாள்.

ஆனால் சிறிது தூரம் நடந்ததும் அவளுடைய உல்லாசம் குறைவதற்கு முகாந்திரம் ஏற்பட்டது.

அவளுடைய தந்தை வேட்டை நாய் சகிதமாகச் சற்றுத் தூரத்தில் போய்க்கொண்டிருப்பதைக் கண்டதும் அவளுக்குச் சொரேல் என்றது. வீட்டில் விருந்தாளிகளை வைத்துவிட்டு இவர் எங்கே கிளம்பிப் போகிறார்? ஒரு வேளை தன்னைத் தேடிக்கொண்டு தானோ? சின்னய்யி கோள் சொல்லிக் கொடுத்து விட்டாளோ? — நடையின் வேகத்தைப் பார்த்தால் மிக்க கோபமாய்ப் போகிறதாகத் தென்படுகிறதே! அப்பாவின் கண்ணில் படாமல் ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்று விட்டு அவர் போனதும் விரைவாக வீட்டை நோக்கிச் சென்றாள். அவர் வீடுவந்து சேர்வதற்குள் தான் போய்ச் சேர்ந்து நல்ல பெண்ணைப் போல் சமையல் வேலையில் ஈடுபட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு நடந்தாள்.



* * *

ஊருணியிலிருந்து அவளுடைய வீடு இருந்த வீதிக்குச் சென்ற குறுக்குச் சந்தில் திரும்பியதும், படமெடுத்து ஆடும் பாம்பைத் திடீரென்று எதிரில் கண்டவளைப்போல் பயங்கரமும் திகைப்பும் அடைந்து நின்றாள்.

ஐயோ! இது என்ன? இவ்வளவு போலீஸ் ஜவான்கள் எதற்காக வந்தார்கள்? அவர்களுக்கு மத்தியிலே இருப்பவர் யார்? குமாரலிங்கம் போலிருக்கிறதே! ஐயோ! இது என்ன? அவர் இரண்டு கையையும் சேர்த்து, — கடவுளே! — விலங்கல்லவா போட்டிருக்கிறது?

இதெல்லாம் உண்மைதானா? நாம் பார்க்கும் காட்சி நிஜமான காட்சிதானா? அல்லது ஒரு கொடூரமான துயரக் கனவு காண்கிறோமா?

அந்த காக்கிக் குல்லாக்காரர்கள் எங்கே? ஆஹா! அவர்கள் இப்போது வேறு உருவத்தில், சிவப்புத் தலைப்பாகையுடன் தோன்றுகிறார்களே? ஆம்; அதோ பின்னால் பேசிச் சிரித்துக்கொண்டு வருகிறவர்கள் அவர்கள் தான்! சந்தேகமில்லை.

திகைத்து, ஸ்தம்பித்து, முன்னால் போவதா, பின்னால் போவதா என்று தெரியாமல், கண்ணால் காண்பதை நம்புவதா, இல்லையா என்றும் நிச்சயிக்க முடியாமல், — பொன்னம்மாள் அப்படியே நின்றாள்.

போலீஸ் ஜவான்களின் பேச்சில் சில வார்த்தைகள் காதிலே விழுந்தன.

“எவ்வளவு ஜோராய் மாப்பிள்ளை மாதிரி நேரே வந்து சேர்ந்தான்? வந்ததுமல்லாமல் ‘நான்தான் புரட்சித் தொண்டன் குமாரலிங்கம்!

நீங்கள் எங்கே வந்தீர்கள்?' என்று கேட்டானே? என்ன தைரியம் பார்த்தீர்களா?'' என்றார் ஒரு போலீஸ் சேவகர்.

"அந்த தைரியத்துக்குத்தான் கை மேல் உடனே பலன் கிடைத்து விட்டதே?'' என்று சொன்னார் இன்னொரு போலீஸ்காரர்.

குமாரலிங்கத்தின் கையில் பூட்டியிருந்த விலங்கைத்தான் அவர் அப்படிக் 'கைமேல் பலன்' என்று சிலேடையாகச் சொல்கிறார் என்று தெரிந்து கொண்டு, மற்றவர்கள் குபீர் என்று சிரித்தார்கள்.

அந்தச் சிரிப்புச் சத்தத்தினிடையே 'வீல்' என்ற ஒரு சத்தம், — இதயத்தின் அடிவாரத்திலிருந்து உடம்பின் மேலுள்ள ரோமக் கால்கள் வரையில் குலுங்கச் செய்த சொல்ல முடியாத சோகமும் பீதியும் அடங்கிய சத்தம்,—கேட்டது. போலீஸ் ஜவான்களின் பரிகாசப் பேச்சைக் கேட்டுக் கொண்டு தலைகுனிந்த வண்ணம் நடந்துவந்த தொண்டன் குமாரலிங்கத்தின் காதிலும் மேற்படி சத்தம் விழுந்தது. சத்தம் வந்த திசையை நோக்கி அவன் ஏறிட்டுப் பார்த்தான்.

பொன்னம்மாளின் முகம்,—ஏமாற்றம், துயரம், பீதி, பச்சாத்தாபம் ஆகிய உணர்ச்சிகள் ஒன்றோடொன்று போட்டி யிட்ட முகம், — மின்னல் மின்னுகின்ற நேரத்துக்கு அவன் கண்



முன்னால் தெரிந்தது. அடுத்த வினாடி, பொன்னம்மாள் தான் வந்த பக்கமே திரும்பினாள். அந்தக் குறுக்குச் சந்தின் வழியாக அலறிக் கொண்டு ஓடினாள்.

போலீஸ் ஜவான்களில் ஒருவர், "பார்த்தீங்களா, ஐயா? சிவப்புத் தலைப்பாகையைப் பார்த்துப் பயப்படுகிறவர்கள் இந்த உலகத்தில் இன்னும் சிலர் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த வீராதி வீரன் இருக்கிறானே, இவன் மட்டும் போலீஸுக்குப் பயப்பட மாட்டான்; துப்பாக்கி, தூக்குத் தண்டனை ஒன்றுக்கும் பயப்பட மாட்டான்!" என்று சொல்லிக் கொண்டே, குமாரலிங்கத்தின் கழுத்திலே கையை வைத்து ஒரு தள்ளுத் தள்ளினார்.

* * *

பொன்னம்மாள் வீறிட்டுக் கதறிய சத்தம் குமாரலிங்கத்தின் காதில் விழுந்ததோ இல்லையோ, அந்தக் கணத்திலேயே அவன் நூறு வருஷங்களுக்கு முன்னால் சென்று விட்டான்.

இதோ அவன் எதிரில் தெரிவது போன்ற ஒரு பிரம்மாண்டமான இலுப்ப மரந்தான் அது. ஆனால் இன்னும் செழிப்பாக வளர்ந்து நாலாபுறமும் கிளைகள் தழைத்துப் படர்ந்திருந்தன. சோலைமலைக் கோட்டை வாசலுக்கு எதிரே கூப்பிடு தூரத்தில் அந்த மரம் நின்றது. மரத்தின் அடியில் இதுபோலவே மேடையும் இருந்தது. ஆனால், அந்த மரத்தின் கீழேயும், மரத்தின் அடிக் கிளையிலும் தோன்றிய காட்சிகள்!......அம்மம்மா! குமாரலிங்கம் கண்களை மூடிக் கொண்டான். கண்களை மூடிக் கொண்டால் மட்டும் ஆவதென்ன? அவனுடைய மனக் கண்ணின் முன்னால் அந்தக் காட்சிகள் தோன்றத்தான் செய்தன.

இலுப்ப மரத்தின் வயிரம் பாய்ந்த வலுவான அடிக் கிளையில் ஏழெட்டுக் கயிறுகள், ஒவ்வொன்றின் நுனியிலும் ஒரு சுருக்குப் போட்ட வளையத்துடன் தொங்கிக் கொண்டிருந்தன.

தொங்கிய வளையம் ஒவ்வொன்றின் அடியிலும் ஒவ்வொரு மனிதன் நின்று கொண்டிருந்தான்.

அப்படி நின்றவர்களைச் சூழ்ந்து பல சிப்பாய்கள் வட்டமிட்டு நின்றார்கள்.

மரத்தடி மேடையிலே ஒரு வெள்ளைக்கார துரை 'ஜம்' என்று உட்கார்ந்திருந்தார். அவர் இரண்டு கையிலும் இரண்டு துப்பாக்கிகள் இருந்தன. அவருடைய வெள்ளை முகம் கோப வெறியினால் சிவப்பாக மாறியிருந்தது.

மேடைக்கு அருகில் சோலைமலை மகாராஜா கீழே நின்று துரையிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார். ரொம்பவும் மன்றாடிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தது போலத் தோன்றியது. "அதெல்லாம் முடியாது; முடியவே முடியாது!" என்று துரை மிக விறைப்பாகப் பதில் சொல்வது போலும் தெரிந்தது.

மரக்கிளையில் தொங்கிய சுருக்குக் கயிற்றின் ஒன்றின் கீழே மாறனேந்தல் உலகநாதத் தேவர் நின்றுகொண்டிருந்தார். துரையிடம் சோலைமலை மகாராஜா ஏதோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. தம்முடைய உயிரைத் தப்புவிப்பதற்காகத்தான் சோலைமலை மகாராஜா அப்படி மன்றாடுகிறாரோ என்ற சந்தேகம் அவர் மனதில் உதித்திருந்தது. அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்ற ஆவல் அவர் மனதில் பொங்கி எழுந்தது. "ஆறிலும் சாவு, நூறிலும் சாவு!" என்னும் பழமொழியை ஆயிரந்தடவை கேட்டிருந்தும், அன்னிய நாட்டான் ஒருவனிடம் போய் எதற்காக உயிர்ப் பிச்சை கேட்க வேண்டும்? அதிலும், வீர மறவர் குலத்தில் பிறந்தவர்களுக்கு அடுக்கக் கூடிய காரியமா, அது?

சோலைமலை மகாராஜாவைக் கூப்பிட்டுச் சொல்லி விடலாமா என்று உலகநாதத் தேவர் யோசித்துக் கொண்டிருந்த போது, கோட்டைக்குள்ளே அரண்மனை அந்தப்புரத்தின் மேன் மாடம் தற்செயலாக அவருடைய கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. மேன் மாடம் கவரவில்லை; மேன்மாடத்திலே தோன்றிய ஒரு பெண் உருவந்தான் கவர்ந்தது. வெகு தூரத்திலிருந்தபடியால் உலகநாதத் தேவரின் கூரிய கண்களுக்குக்கூட அந்த உருவம் யாருடையது என்பது

நன்றாய்த் தெரியவில்லை. ஆனால் அவருடைய மனதுக்கு அவள் இளவரசி மாணிக்கவல்லிதான் என்று தெரிந்து விட்டது.

முதலில், இந்தக் கோரக் காட்சியைப் பார்ப்பதற்குச் சோலைமலை இளவரசி அந்தப்புரத்து மேன்மாடத்துக்கு வரவேண்டுமா என்று உலகநாதத் தேவர் எண்ணினார். பின்னர், தம்முடைய வாழ்நாளின் கடைசி நேரத்தில் இளவரசியைப் பார்க்க நேர்ந்த பாக்கியத்தை எண்ணி மகிழ்ந்தார். அடுத்த கணத்தில், "ஐயோ! இந்த விவரமெல்லாம் அவளுக்குத் தெரியும்போது என்னமாய் மனந் துடிப்பாளோ?" என்று எண்ணி வேதனையடைந்தார். எனினும், சோலைமலை மகாராஜா தம்மிடம் கொண்டிருந்த விரோதத்தை மாற்றிக் கொண்டது இளவரசிக்கு ஓரளவு ஆறுதல் அளிக்குமல்லவா என்ற எண்ணம் தோன்றியது. தாம் சொல்லி அனுப்பிய செய்தியை மாணிக்கவல்லியிடம் சோலைமலை மகாராஜா சரியாகச் சொல்ல வேண்டுமே என்ற கவலை தொடர்ந்து வந்தது.

ஐயோ! இதென்ன? மாடி முகப்பின் மேல் நின்ற பெண் உருவம் 'வீல்' என்று அலறும் சத்தத்துடனே கீழே விழுகிறதே?

கடவுளே! சோலைமலை இளவரசி அல்லவா அந்தப்புரத்தின் மேல்மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டாள்! ஐயோ! அவள் உயிர் பிழைப்பாளா?

சோலைமலை மகாராஜா துரையிடம் மன்றாடுவதை நிறுத்தி விட்டு, "ஓ!" என்று அலறிக் கொண்டு கோட்டை வாசலை நோக்கி ஓடினார்.

மாறனேந்தல் உலகநாதத் தேவரும் தம்முடைய நிலையை மறந்து, இருபுறமும் காவல் புரிந்து நின்ற சிப்பாய்களையும் மறந்து, கோட்டை வாசலை நோக்கித் தாமும் பறந்து ஓடினார்.


'டும்' 'டும்' 'டுடும்' என்று துப்பாக்கி வேட்டுகள் தீர்ந்தன.

* * *

போலிஸ் ஜவானால் கழுத்தைப் பிடித்துத் தள்ளப்பட்ட தேசத் தொண்டன் குமாரலிங்கம் தடுமாறித் தரையிலே விழுந்து மூர்ச்சையானான்!

(தொடரும்)

பூனா, சரஸ்வதி வித்யாலயா ஹைஸ்கூல் நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

30—3—47 ஞாயிறு

மாலை 5-30 மணிக்கு

வாடியா காலேஜ் ஹாலில்

டிக்கெட்: ரூ. 100, ரூ. 25, ரூ. 10

பி. எஸ். நாராயணஸ்வாமி
சேர்மன்.

வி. ஸ்ரீனிவாசன்,
கே. ராம அய்யங்கார்,
காரியதரிசிகள்

அட்டைப்பட விளக்கம்

நை சீமாட்டியின் தொண்டு

இந்தியாவிலிருந்து இங்கிலீஷ்காரர்கள் 1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் மூட்டை கட்டிவிட்டுப் போகிறார்களா? இந்தியாவை அடியோடு கைவிட்டுவிட்டுப் போய்விடப் போகிறார்களா? — அப்படித்தான் எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நமக்கு அதில் அவ்வளவு நம்பிக்கை யில்லை. நமக்கு நம்பிக்கை யில்லாததின் காரணங்களை மூடுமந்திரமாக வைக்காமல் பகிரங்கமாகச் சொல்லி விடுகிறோம்.

சென்னைக் கவர்னர் நை பிரபு இட்டிலி சாப்பிட்டு ருசி கண்டு விட்டார். இட்டிலியோடு 'சட்னி'யும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டார். இதைப்பற்றித் தினப் பத்திரிகைகளில் நேயர்கள் படித்திருக்கலாம். இனிமேல் கவர்னர் நை 'குவிட் இண்டியா!' என்று சொன்னால் 'ஓய்?' என்றுதான் கேட்பார். 'நை! நை!'' என்றுதான் பதில் சொல்வார்.

இப்போது நல்லெண்ணெய்ப் பஞ்சமா யிருப்பதால், இந்தமட்டோடு போயிற்று. இட்டிலியோடு மிளகாய்ப் பொடியும் நல்லெண்ணெயும் சேர்த்துக் கவர்னர் நை அவர்களுக்கு யாராவது கொடுத்து விட்டால், தீர்ந்தது! அப்புறம் இமய மலையை நகர்த்தினாலும் நகர்த்தலாம்; கவர்னர் நையை இங்கிருந்து அப்புறப்படுத்தவே முடியாது!



போதாததற்கு, லேடி நை சீமாட்டி, தென்னாட்டில் ஏழைகளின் க்ஷேமத்தை முன்னிட்டுத் தொண்டு செய்ய ஆரம்பித்திருக்கிறார். தமது கணவருடன் அங்கு மிங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து வரும்போது, ஆங்காங்கே அவர் கண்ட ஏழ்மைக் கொடுமையும் ஏழை மக்கள் படும் துன்பங்களும் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் உருக்கி விட்டன. எனவே, ஏழைகளின் சகாயத்துக்காக வென்று "The Madras Provincial Welfare Fund" என்ற பெயர் கொண்ட ஒரு பெருநிதி திரட்ட ஆரம்பித்திருக்கிறார். அதற்காக ஒரு கமிட்டியும் ஸ்தாபித்திருக்கிறார். மேற்படி கமிட்டிக்கு லேடி நை, மாகாணப் பிரதம மந்திரி, எதிர்க் கட்சித் தலைவர் ஆகியவர்கள் போஷகர்கள். ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி தலைவர். ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் எம். எல். ஏ., அவர்களின் புதல்வரான ஸ்ரீ கோவிந்த சுவாமிநாதன் காரியதரிசி.

இப்படிப்பட்ட செல்வாக்கு வாய்ந்த கமிட்டியுடன் லேடி நை சீமாட்டியார் சென்னை மாகாணத்து ஏழை மக்களின் க்ஷேமத்துக்காகத் தொண்டு செய்ய முன்வந்திருக்கிறார். ஆங்கில சாதியார், — ஆண்களாகட்டும், பெண்களாகட்டும், — எடுத்த காரியத்தை உறுதியாகச் செய்து முடிக்கிறவர்கள். எனவே, லேடி நை சீமாட்டியாரும் சென்னை மாகாணத்து ஏழைகளின் ஏழ்மைத் தனத்தைப் போக்கி அவர்களுக்கு நிரந்தர க்ஷேமத்தை ஏற்படுத்திவிட்டே இந்த மாகாணத்தை விட்டுப் புறப்படுவார் என்று எதிர்பார்க்கலாமல்லவா? லேடி நை மேற்கொண்டுள்ள காரியம் 1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள்ளே முடிந்து விடும் என்று யாரும் சொல்ல முடியாது. எனவே எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டுமானால் லேடி நை சீமாட்டியார் அடுத்த 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பிறகும் இங்கே இருந்துதான் ஆகவேண்டும். அதிலும், சென்ற பதினொரு மாதமாக இந்தச் சென்னை மாகாணத்தில் நடப்பதுபோன்ற அரசாங்கம் இன்னும் சிலகாலம் நடந்துவரும் பட்சத்தில், இந்த மாகாணத்தின் க்ஷேமத்துக்காக லேடி நை பலபல வருஷம் இங்கே இருந்து தொண்டு செய்யும்படி இருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை!

ஒரு திருத்தம்

சென்ற இதழில் வெளியான "சரணம், சாமி! ஐயப்பா!" என்னும் கட்டுரையின் இரண்டாம் பகுதியில் சில பெயர் மாற்றங்கள் எப்படியோ புகுந்து கொண்டிருக்கின்றன. எட்டயபுரம் ஆசிரியர் மகாநாட்டில் தீர்மானத்தைப் பிரேரேபித்தவர் ஸ்ரீ பி. பெருமாள் என்று அறிகிறோம். அதோடு, ஸ்ரீ கே. முத்துராமகிருஷ்ணன், (சோலைமலைக் குமாரலிங்கத்தின் ஞாபகார்த்தமாகவோ, என்னவோ) முத்துராமலிங்கமாக மாறி விட்டிருக்கிறார்! (கட்டுரையிலேதான்!) எட்டயபுரம் ஆசிரியர் மகாநாட்டின் காரியதரிசி ஸ்ரீ முத்துராமகிருஷ்ணன் அவர்கள் தமது சகாக்களுடன் எட்டயபுரத்தின் எல்லைப்புறத்துக்கு வந்திருந்து மகாநாட்டுத் தலைவர் ரஸிகமணி டி. கே. சி. முதலியவர்களைச் சிறப்பாக வரவேற்று மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைத்ததைப் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

அக்கப் போர்

"சக்கைப்போடு"

"ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, அவருக்குச் சென்னையில் இறங்குவதற்கு இடமில்லையா, எதற்காக அடையாற்றில் இறங்கினார்?" என்னும் நாஸூக்கான பிரச்னையை ஒரு சந்தேகப் பேர்வழி கிளப்பி யிருக்கிறார்.

சென்னைக் காங்கிரஸ் விவகாரங்களின் சூழ்களைத் தெரிந்து கொண்ட பிறகு ராஷ்டிரபதிக்குச் சென்னைக்குப் பக்கத்தி லுள்ள சமுத்திரத்தில் இறங்கலாம் என்றே தோன்றி யிருக்கும்! இத்தமட்டும் அடையாற்றில் இறங்கினாரே என்று நாம் சந்தோஷப்படுகிறோம்.

★

ஸ்ரீ பிரகாசம்காரு பிரதம மந்திரி பதவியை ராஜீநாமாச் செய்வது என்று நிர்மானித்த பிறகு அவரைக் கடைசி முறையாகப் பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டு பேசிய விவரங்கள் தினப் பத்திரிகையில். விஸ்தாரமாக வெளியாகி யிருக்கின்றன.

மேற்படி பேட்டியின்போது ஸ்ரீ பிரகாசம்காரு, "உலகம் நன்றாய்த்தான் ஆரம்பமாயிற்று; நன்றாய்த்தான் முடியப் போகிறது!" என்று உறுதி கூறினாராம்.

இதிலிருந்து உலகம் ஆரம்பமானபோது பக்கத்தில் ஸ்ரீ பிரகாசம்காரு இருந்தார் என்று ஏற்படுகிறது. உலகம் முடிகிற காட்சியை அருகில் இருந்து பார்க்கப் போகிறார் என்றும் ஊகிக்க முடிகிறது.

ஸ்ரீ பிரகாசம் காருவின் சௌகரியத்தை முன்னிட்டு 'ஆட்டம் பாம்ப்' ஆராய்ச்சியை இனிக் கொஞ்சம் துரிதமாகவே நடத்து வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

★

மேற்படி பேட்டியின் முடிவில் "பத்திரிகை நிருபர்கள் ஸ்ரீ பிரகாசத்தைப் புகழ்ந்தார்கள். அவரை உண்மையான கர்ம யோகி என்று பாராட்டினார்கள்!" என்று பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருக்கிறது.

மேற்படி செய்தியைப் பத்திரிகையில் படித்ததும் முப்பதாயிரம் வாசகர்கள், "அட கர்மமே!" என்று சொன்னதாக நமது அக்கப்போர் நிருபர் வெளியிடுகிறார்.

★

"ஆயுர்வேதத்தின் பிரதம ஆச்சாரிய புருஷர் நான்முகப் பிரம்மா" என்னும் செய்தி ஒரு விளம்பரத்தில் பிரம்மாவின் போட்டோவுடன் பிரசுரமாகி யிருக்கிறது.

ரொம்ப சந்தோஷம்; நான்முகப் பிரம்மாவுக்கு ஜலதோஷம் தலைவலி ஏதாவது வந்தால் அவசியம் ஆயுர்வேத மருந்து களையே சாப்பிடும்படி சிபார்சு செய்கிறோம்.

★

பிரம்மா பதினாயிரம் சுலோகங்களில் ஆயுர்வேத சாஸ்திரத்தை எழுதினார் என்பதாகவும் மேற்படி பத்திரிகை விளம்பரம் தெரிவிக்கிறது.

"பிரம்மா பதினாயிரம் சுலோகம் எழுதியது சரிதான்; அதை என்ன லிபியில் எழுதினார்? நாகரி லிபியிலா? உருது லிபியிலா?" என்று ஒரு ஹிந்திப் பிரசாரகர் கேட்கிறார்.

"நாகரி லிபியிலும் இல்லை; உருது லிபியிலும் இல்லை; 'பிரம்ம லிபி' என்று சொல்கிறார்களே, அந்த லிபியில்தான் எழுதினார்!"—என்று மகா மஹோபாத்தியாய கரையான் சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்.

★

காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும், எம். எல். ஸி.க்களும் கூடியிருந்த கூட்டத்தில் ஆச்சாரிய கிருபளானி, இனிமேல் காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவுக்கு மாறாக யாரும் நடக்கக்கூடாதென்றும், அப்படி நடந்தால்

கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்தாராம்.

இப்படி எச்சரித்துவிட்டுக் கிருபளானி திருவனந்தபுரம் போனாரோ, பிழைத்தார்! திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தால், தெரிந்திருக்கும் சேதி!

★

“மேலிடத்துப் புத்திமதியைக் கேட்டிருந்தால், இந்த மந்திரி சபையே ஏற்பட்டிராதே!” என்று ஆச்சாரிய கிருபளானி, இன்னொருவரிடத்தில் கூறினாராம்.

உண்மைதான்; மேலிடத்துப் புத்திமதியை அப்போதே கேட்டிருந்தால், பிரகாசம் மந்திரி சபையும் ஏற்பட்டிராது.

இப்போது ஆச்சாரிய கிருபளானி வந்து புத்தி சொல்லும் அவசியமும் நேர்ந்திராது.

ஆச்சாரிய கிருபளானியைச் சிலர் விருந்துக்கு அழைக்க வந்தபோது, அவர் கேட்ட ரொக்க ரூபாயைக் கொடுத்துவிட்டு, மேற்படி தொகையைப் புத்திக் கொள்முதல் கணக்கில் எழுதும்படியும் நேர்ந்திராது.

★

பிரதம மந்திரி பிரகாசம்காரு சென்னைச் சட்டசபையில் பின்வரும் ஆச்சரியகரமான சம்பவத்தைத் தெரியப்படுத்தினர்.

ஒரு ஹோட்டலில் சென்னை மந்திரிகள் ஐந்து பேர் ஒரு மேஜையைச் சுற்றி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். அந்த மேஜைக்கு அடியில் ஒரு சி. ஐ. டி.க்காரர் ஒளிந்திருந்து அவர்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார் என்று தெரிய வந்ததாம்!

ஸ்ரீ பிரகாசம்காரு அதற்குப் பிற்பாடு நடந்த காரியங்களைச் சொல்லவில்லை. மேஜை விரிப்புக்கு அடியில் ஒளிந்திருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த நமது விசேஷ அக்கப்போர் நிருபர் பிற்பாடு நடந்த திடுக்கிடும் சம்பவங்களைத் தெரியப்படுத்துகிறார். அவற்றைக் கீழே படித்து நேயர்கள் தயவுசெய்து திடுக்கிடக் கோருகிறோம்.

★

மேற்படி ஸி. ஐ. டி.க்காரரை மந்திரிமார்கள் கண்டுபிடித்து, மேஜைக்கு அடியிலிருந்து வெளியேற்றி, அவருடைய நடத்தைக்குக் காரணம் கேட்டபோது, “எஜமான்மார்களே! நீங்கள் மந்திரிகள் என்பது எனக்குச் சத்தியமாய்த் தெரியாது. யாரோ பிளாக் மார்க்கெட்காரர்கள் என்று நினைத்து விட்டேன்!” என்பதாக அந்த ஸி. ஐ. டி.க்காரர் சமாதானம் சொன்னாராம்.

இதைக் காட்டிலும் அதி ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், மேற்படி ஐந்து மந்திரிகளில் நாலு மந்திரிகள் அவ்விடத்தை விட்டுப் போன பிறகு, பாக்கியிருந்த ஒரு மந்திரி அந்த ஸி. ஐ. டி.க்காரரைப் பார்த்து, “பலே அப்பனே! நல்ல வேலை செய்தாய்! என்னைத் தெரிகிறதா?” என்று கேட்டாராம். மேஜைக்கு அடியில் ஒளிந்திருந்த ஸி. ஐ. டி.க்காரருக்கு உடனே உண்மை தெரிந்ததாம்! அதாவது பாக்கியிருந்த ஒரு மந்திரி உண்மையில் மந்திரி அல்ல,—மந்திரிபோல் வேஷம் போட்டு நடித்த பெரிய ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர் என்று அறிந்து கொண்டாராம்!

உடனே அந்தச் சின்ன ஸி. ஐ. டி.க்காரர் ஒரு பெரிய ஸலாம் வைத்து, “எஜமானே! அடியேன் இப்போது மூர்ச்சையடைந்து விழலாமா?” என்று கேட்டபோது, பெரிய ஸி ஐ. டி. உத்தியோகஸ்தர் “வேண்டாம்! வேண்டாம்! உண்மையில் நீ எதற்காக இந்த மேஜையடியில் படுத்துக் கொண்டிருந்தாய் என்பது எனக்குத் தெரியும். மந்திரிகளை வேவு பார்க்கவும் அல்ல; கள்ள மார்க்கெட்டைக் கண்டுபிடிக்கவும் அல்ல. உன் வீட்டில் காப்பிக்குப் போடச் சர்க்கரை இல்லாதபடியால் இந்த ஹோட்டல் முதலாளியிடம் கொஞ்சம் சர்க்கரை கேட்டு வாங்கிக்கொண்டு போகலாம் என்று வந்தாய்! உண்மையா, இல்லையா?” என்றாராம்.

சின்ன ஸி. ஐ. டி.க்காரர் நடுநடுங்கிக் கொண்டே, “உண்மைதான், எஜமானே! தங்களுக்கு எப்படித் தெரிந்தது?” என்று கேட்க, பெரிய ஸி. ஐ. டி.க்காரர், “பயப்படாதே! நானும் அதே காரியத்துக்காகத்தான் மந்திரி வேஷம் போட்டுக் கொண்டு வந்தேன்! உனக்குச் சர்க்கரை ஏதாவது கிடைத்ததா?” என்றாராம்.

மேலே கண்ட சம்பவங்களையெல்லாம், “அதிசயம்; ஆனால் உண்மை!” என்ற தலைப்பிலே பிரசுரிக்கலாமா? அல்லது “அதிசயம்; ஆனால் உண்மையில்லை!” என்ற தலைப்பில் பிரசுரிக்கலாமா? வாசக நேயர்களின் அபிப்பிராயம் என்ன?

BATHING HABITS OF INDIA—1

SHIKAI *in South India*





இந்தப் பரந்த இந்திய தேசத்திலுள்ள எல்லா மாகாணங்களிலும் உடலைச் சுத்தி செய்யும் முறை வெவ்வேறு வழிகளில் கையாளப் படுகின்றன. உதாரணமாக தமிழ் நாட்டில் (தென்னிந்தியா) சீயக்காய் பொடி உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இந்தப் பழக்கம் மாறி, ஆயிரக்கணக்கான இல்லங்களில் சீயக்காய்ப் பொடிக்குப் பதிலாக "ஸ்வஸ்திக் காந்தி-சோப்" உபயோகிக்கும் பழக்கம் ஏற்பட்டு வருகின்றது.

மற்றும் இதர ஸ்வஸ்திக் தயாரிப்புகள்: வாசனை காஸ்டர் ஆயில், ஷேவிங் ஸ்டிக், வாஷிங் சோப், "கோவரின்" பிராண்டு வனஸ்பதி முதலியன.

SWASTIK
KANTI SOAP

UNMATCHED FOR QUALITY

SWASTIK OIL MILLS LIMITED BOMBAY.

SOM. 4 SHILPI

BE INDIAN—BUY INDIAN!



நவகாளிக் - - காட்சிகள்

மகாத்மா காந்திக்குப் பதினாயிரக் கணக்கானவர்கள் மாலை சூட்டியிருக்கிறார்கள். ஆனால் காந்திஜியால் மாலை சூட்டப்படும் பாக்கியம் ஒரு சிலருக்குத்தான் கிடைத்திருக்கும். நந்திக்கிராமத்திலிருந்து மகாத்மா புறப்பட்டபோது தம் மீதிருந்த மாலையை ஓர் ஏழைக் கிழவிக்கு அன்புடன் சூட்டும் ஆனந்தக்காட்சி.







காந்திஜியின் பேட்டிக்காக பட்டபட்ட பேர்வழிகளும் பல நாட்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் காந்திஜிக்குத் தாமாக வலுவில் சென்று ஏழை வயோதிகர்களின் சுக துக்கங்களை விசாரிப்பதில் ஒரு தனி ஆர்வம்.

கலாசாலைகளில் தேர்ச்சி பெற்று சமூகத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் வங்காளப் பெண்மணிகள். இவர்கள் கிழக்கு வங்காளக் கிராமங்களுக்குத் தனியாகச் சென்று அமைதியும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையும் நிலவ அரும்பாடு பட்டு வருகின்றனர்.






நம் போன்றவர்களுக்கேற்ற
முதல்தரமான ஸிகரட்
நம்பர் டென்
வெர்ஜினியா
NUMBER
TEN
VIRGINIA
NTK 192 TM



கிட்டுவும் பூதமும்

ராஜி



கிட்டுவிடம் ஒரு மோதிரம் இருந்தது. வெகு நாட்களுக்கு முன்பு அந்தப் பித்தளை மோதிரத்தைக் கிட்டுவின் தாத்தாவுக்கு ஒரு மந்திரவாதி கொடுத்திருந்தான். அந்த மந்திர மோதிரத்தைக்கிட்டுவிடம் கொடுத்து அதைப் பிறருடைய நலனுக்காக உபயோகப் படுத்தும்படி தாத்தா சொல்லியிருந்தார். ஆனால் கிட்டு அந்த மோதிரத்தைத் தன் சுயநலத்துக்கே உபயோகப்படுத்தி வந்தான்.

பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் உபாத்தியாயர் பல கணக்குகளைக் கொடுத்து வீட்டில் போட்டுக்கொண்டு வரும்படி சொல்லுவார். கிட்டு முன்னெல்லாம் ஒரு நாளாவது அந்தக் கணக்குகளைச் சரியாகப் போட்டுக் கொண்டு வந்து உபாத்தியாயரிடம் காண்பிக்க மாட்டான். இப்பொழுதோ வென்றால் அவன் தினமும் தவறாமல் கணக்கைச் சரியாகப் போட்டுக் கொண்டு வந்தான்.

உபாத்தியாயருக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. கிட்டுவின் வீட்டிலோ கணக்குகளைச் சரியாகப் போட்டுக் கொடுப்பதற்குத் தகுந்த மனிதர்களும் கிடையாது. அவன் எப்படிக் கணக்குகளைச் சரிவரப் போட்டுக் கொண்டு வருகிறான்? — இதை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டுமென்று உபாத்தியாயர் பெரிய பெரிய கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் புதிய புதிய கணக்குகளைப் போட்டுக் கொண்டு வரும்படி சொன்னார். பள்ளிக்கூடத்திலுள்ள ஒரு பையனுவது அந்தக் கணக்குகளைச் சரியாகப் போட்டுக் கொண்டு வரவில்லை. ஆனால் கிட்டு மாத்திரம் அந்தக் கணக்குகளைச் சரியாகப் போட்டுக் கொண்டு வந்தான்!

உபாத்தியாயர் கிட்டுவைக் கூப்பிட்டு, “இந்தக் கணக்குகளை நீ எப்படிப் போட்டாய்? யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தது? உண்மையைச் சொல்!” என்று மிரட்டினார்.

“நானாகவே போட்டேன் ஸார்! வேறு ஒருவரும் எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை!” என்றான் கிட்டு.

உபாத்தியாயர் ‘அப்படியா?’ என்று கிட்டுவைத் தட்டிக் கொடுத்தார். ஆனால், தட்டிக் கொடுத்தாரே தவிர, கிட்டுவைக் கடைசி முறையாக இன்னொரு தடவை பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று நிச்சயித்தார். ஆகவே, அன்றும் வீட்டில் போட்டுக் கொண்டு வரும்படி புதிய கணக்கு ஒன்றைக் கொடுத்தார். அந்தக் கஷ்டமான கணக்கைச் சந்தோஷமாகவே எழுதிக் கொண்டு போனான் கிட்டு.

கிட்டு இத்தனை நாளும் வீட்டுக் கணக்குகளையெல்லாம் எப்படிப் போட்டுக் கொண்டு வந்தான் தெரியுமா? அவன் வீட்டிற்கு வந்ததும் தன்னிடமுள்ள மந்திர மோதிரத்தைத் தேய்ப்பான். உடனே ஒரு பெரிய பூதம் அவன் எதிரில் தோன்றும். “ஏ, பூதமே! இந்தக் கணக்குகளுக்குச் சரியான விடைகளைக் கொண்டு வா!” என்பான். அந்தப் பூதம் அரை நொடியில் அந்தக் கணக்குக்குச் சரியான விடை எந்தப் புத்தகத்தில் இருக்கிறதோ, அந்தப் புத்தகத்தைத் தேடி எடுத்துக் கொண்டு

வரும். கிட்டு அந்தப் புத்தகத்தி லுள்ள விடையை எழுதிக் கொண்டு வந்து, உபாத்தியாயரிடம் காட்டி நல்ல பெயர் வாங்கிவிடுவான்.

அன்றைய தினமும் அதே மாதிரி மந்திர மோதிரத்தைத் தேய்த்தான். பூதம் வந்தது. "இந்தக் கணக்குக் கும் எப்படியாவது சரியான விடை கொண்டு வா!" என்று உத்தரவிட் டான். பூதமும், "இதோ கொண்டு வருகிறேன்!" என்று கிளம்பிற்று. ஆனால், அவ்வாறு கிளம்பிய பூதம் வெகு நேரம் ஆகியும் வரவில்லை.

கிட்டுவுக்கு ஒன்றும் புரியவில்லை. இரவு பன்னிரண்டு மணி வரை அவன் அந்த பூதத்துக்காகக் காத்திருந்து பார்த்தான். அவனுக்குத் தூக்கமும் வரவில்லை. "இதென்ன, இந்த பூதம் இப்படி மோசம் செய்துவிட்டதே!" என்று யோசனை செய்த வண்ணம் தன் படுக்கை அறையில் உட்கார்ந் திருந்தான். "ஐயோ! அப்பா! என்னை விட்டுவிடு!" என்று யாரோ கத்தி னார்கள். கிட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் எதிர் பார்த்திருந்த பூதம் யாரோ ஒருவரைத் தூக்கிக் கொண்டு வந்து கிட்டுவுக்கு எதிரே விட்டது.

"அடடா இவரை ஏன் தூக்கிக் கொண்டு வந்தாய்?" என்று நடுங்கிக் கொண்டே கேட்டான் கிட்டு.

"நான் என்ன செய்வது? நீ கொடுத்த கணக்குக்கு எங்கு தேடியும் எனக்கு விடை அகப்படவில்லை. ஆகவே, அந்தக் கணக்கைக் கொடுத்த உன் உபாத்தி யாயரையே தூக்கிக் கொண்டு வந்து விட்டேன். நீயே அவரைக் கேட்டு விடையைத் தெரிந்து கொள்!" என்றது பூதம்.

"ஓஹோ! இப்படித்தான் நீ தினந் தோறும் கணக்குகளைப் போட்டுக் கொண்டு வருகிறாயோ!" என்றார் உபாத்தியாயர்.

கிட்டுவுக்கு அவமானம் தாங்க வில்லை. அவன் தலை குனிந்து நின்றான்.

இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பைன் ஆர்ட்ஸ் (ரெஜிஸ்டர்ட்)

24—3—47 திங்கள் மாலை 6-30 மணிக்கு



எழும்பூர் மியூஸியம் தியேட்டரில்

★

இன்ஸ்டிட்யூட் மாணவியான

ஸௌ. நிர்மலா விச்வநாதன்

(நாட்டிய கலாவிசாரத பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஆசிரியர்)

பரதநாட்டியம், அபிநயம்

டாக்டர் சர். அளகப்ப செட்டியார் அவர்கள்

தலைமை வகிப்பார்


-மாலி-
1
"ஓய்! அந்த டாக்டரிடம் போய் உடனே வீட்டு வாடகையை வாங்கிக் கொண்டு வாரும்."
2
3
"என்ன ஸார்! இப்படி இளைத்து விட்டீரே! உடம்புக்கு என்ன உமக்கு?"
4
"உடம்புக்கு ஒன்றுமில்லை......"
"சரி, நாக்கை நீட்டும்!"
5
"ஐயையோ! உமக்கு ஹிருதய வியாதி னின்னு வந்திருக்கு.........
6
"......ஒரு மாதத்துக்கு ஓய்வெடுத்துக் கொண்டு இந்த மருந்தை வாங்கிச் சாப்பிடும்! கண்டபடி அலையாதீர்!"
7
8
"டாக்டர் என்ன சொன்னார்?"
"ஒரு மாதம் ஓய்வெடுத்துக்கொண்டு இந்த மருந்தைச் சாப்பிடச் சொன்னார்!"

ஹரிஜன கைத்தொழிற்சாலை உதவிக் கண்காட்சி

(தக்கர்பாபா வித்யாலயா கட்டிட நிதிக்காக)

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்

21-3-1947 முதல் 15-4-1947 வரை

தினசரி பிற்பகல் 2 முதல் 9 மணி வரை

பிரவேசக் கட்டணம் 4 அணா

★

எங்கள் சங்கீத விழாவில் கீழ்க்காணும் வித்வான்களும், வித்வாம்ஸினிகளும் கச்சேரி செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்கள் :

அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்	கோபிநாத்
செம்பை வைத்தியநாத பாகவதர்	ரமணராவ் சாம்ராஜ்யம்
ஜி. என். பாலசுப்ரமணியம்	குல்கர்னி ஸ்ரீனிவாஸ்
மதுரை மணி அய்யர்	பிரணவ கலாமண்டலி
தண்டபாணி தேசிகர்	வைக்கம் சரஸ்வதி
வி. வி. சடகோபன்	பேபி கமலா
பி. எஸ். வேதாசலம் செட்டி	குமாரி கல்யாணி
டி. கே. ராதாகிருஷ்ணன்	டி. சூர்ய குமாரி
டி. கே. பட்டம்மாள்	என். ஏ. சுந்தரம்
என். வி. வசந்தகோகிலம்	எம். எல். வஸந்தகுமாரி

கே. பி. சுந்தராம்பாள்

ரூ. 100, ரூ. 50, ரூ. 25. டோனர் டிக்கட்டுகள் தயார்

காரியதரிசி

ஹரிஜன கைத்தொழிற்சாலை உதவிக் கண்காட்சி

தேனாம்பேட்டை, கதீட்ரல் போஸ்டு

வான சஞ்சாரம்

இசைத்தேவி

கர்நாடக சங்கீதத்தை அழகு படுத்த தேசியக் கலப்போ இக்கால நவீனங்களோ வேண்டியதில்லை; சம்பிரதாய முறைப்படியே திறம்படக் கையாண்டால் அதிலேயே ஓர் தனி யழகும் பெருமையும் உண்டு, என்பதைத் திருச்சியில் பிப்ரவரி 11உ. முழு நேரக் கச்சேரி செய்த பாலக்காடு ராமபாகவதர் நிரூபித்தார். வெகு விஸ்தாரமாய் வழங்கிய தோடி ராகத்தில், தேய்வில்லாது ஸ்படிகம் போல் கொட்டிய பிர்க்காப் பொழிவும், பொருத்தமான கமகங்கள் நிறைந்த அழகு சஞ்சாரக் கோவைகளும், கேட்டோரை வியக்க வைத்தன. உருப்படிகள் வசீகரமா யிருந்தன. ஸ்வர ப்ரஸ்தாரங்கள், லய வின்யாசத்துடன் ராக பாவம் ததும்பி விளங்கின.

• • •

இயற்கைக் குரல் வளப்பும், சரளமான உதவுபடியும் கொண்ட ருக்மிணி வாஸுதேவன், தம் கலையை நாளுக்கு நாள் சிறப்பித்துக் கொண்டு வருகிறார் என்பது, 11உ. சென்னையிலிருந்து கேட்ட அவர் கானத்திலிருந்து தெரிய வந்தது. கல்யாணியும், கேதார கௌளையும், அனுயாசமாயும், நற்சொரூபங்களையும் வெளி வந்தன. 'வாசுதேவ' கிருதி. நிதானமும் சாஹித்யத் தெளிவும் கொண்டு, மனோஹரமா யிருந்தது. அதில் அமைந்த நிரவல் ஸ்வரங்கள் ராகபாவத்துடன் பிருவா யிருந்தன.

அன்று அதே நிலையத்திலிருந்து கேட்ட மணக்கால் ரங்கராஜனின் பாட்டும் சிறப்பா யிருந்தது. ஸிம்மேந்திரமத்யமம், தோடி ராகங்கள் தரமா யிருந்தன.

12உ. சென்னையில் பாடிய சாவித்ரி ஸ்ரீனிவாசன், ரஞ்சகக் குரலும் குறிப்பிடத்தக்க பாணியும் கொண்டவர் என்பது, அவர் வழங்கிய கரஹரப்ரியா, பேகடா கிருதி, ராகமாலிகை, இவைகளிலிருந்து தெரிய வந்தது.

13உ. திருச்சியிலிருந்து கேட்ட வேணு கானம் கவனத்தைக் கவர்ந்தது. சுருதி சுத்தமும், நல்வழியும் கொண்டு, ஆபோகி, பகுதாரி, தேவமனோஹரி ராகங்களைத் திறம்படக் கையாண்டார். கல்யாணி எல்லாவற்றையும் தூக்கியடித்தது. குழல் வாசித்தவர் திருநெல்வேலி சங்கர கோபாலன் என்று அறிவிக்கப்பட்டது.

14உ. சிறிது நாதஸ்வரவழியும், ஆங்காங்கே நாடக மேடை வழியும் கொண்டு, தைரியமாயும், தாராளமாயும் விட்டுப் பாடிய ஒரு ஸ்திரீயின் கானம் சென்னையி லிருந்து கேட்டது. தோடி ஜோரா யிருந்தது. பாடியவர் சுசித்திரம் வி. கோமதி.

அன்று திருச்சியில் நடந்த சாவித்ரி கணேசனின் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது. சங்கராபரணம் சௌக்யமா யிருந்தது. ஹரிகாம்போதியிலும், 'பாமாலே' உருப்படியிலும் மதுரை மணி வழி பிரதிபலித்தது.

16உ. சென்னையில், பிற்பகலில் ஒரு மணி நேரம் கச்சேரி செய்த டி. ஆர். பாலசுப்ரமணியம் திறமையும் நல்வழியும் கொண்ட இளம் வித்வான். அவரது கானத்தைக் கேட்டவர்களுக்கு அவர் யார் வழியைப் பின்பற்றுகிறார் என்பது தெரிந்திருக்கும். சுபபந்துவராளி இழைந்து வந்த ஜோரிலும், கல்யாணி, ஹிந்தோளம், ஆலாபனைகளிலும், 'வாஸுதேவ' கிருதியின் நிரவல் ஸ்வரங்களிலும் அவ்வழி நன்கு பிரதிபலித்தது.

• • •

சென்னை நிலையத்தில் ஒரே வாரத்தில் இரண்டு நாள் கச்சேரி செய்ய சந்தர்ப்பம் பெற்றவர் புரொபஸர் த்வாரம் வெங்கடசாமி நாயுடு. அவரது வயலின் வாத்யம் எத்தனை நாள் வாசிக்கப்பட்டாலும், சலியாது கேட்கத்தகுந்த தனிச் சிறப்புள்ளது. 19உ. கேதார கௌளையை ராகம், தானம், பல்லவிக்காக எடுத்துக் கொண்டு முக்கால் மணி நேரம் ரஸிகர்களை இன்னிசை வெள்ளத்தில் மூழ்க வைத்தார். 22உ. இரவு நடந்த முழு நேரக் கச்சேரியில், சங்கராபரணம் விஸ்தாரமாய் வெளிவந்தது. மாயா மாளவ கௌளை ராகம் தானம், அதற்குப் பின் ராகமாலிகை இவை உருக்கமா யிருந்தன. தவிர, பூர்வி கல்யாணி, வஸந்தா, நீலாம்புரி ராகங்களும், உருப்படிகளும் வசீகரமா யிருந்தன.

• • •

20உ. திருச்சியிலிருந்து, சிறந்த ஞானமும், நாஸுக்கு வழியும் கொண்ட இரு குரலிசை ஒன்று கேட்டது. தோடியில் விழுந்த பல அழகு கற்பனை சஞ்சாரங்கள் திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளையவர்களின் நாதஸ்வர வழியை ஞாபகமூட்டின. கரஹரப்ரியா கல்யாணி ராகங்களும், 'நீதுசரண' கிருதியின் நிரவல் ஸ்வரங்களும் ஜோரா யிருந்தன. பாடியவர்கள் நாகம்மா, கமலா.

23உ. சென்னையில் நடந்த ஆர். ஸ்யாமளா தேவியின் வீணை கானம் குறிப்பிடத் தக்கது. வீணையுடன் இழைந்து அடிக்கடி பாடியதும், ராகங்களிலும் உருப்படிகளிலும், சஞ்சார சங்கதிகளைச் சரளமாயும், தாராளமாயும், முதலில் விட்டுப் பாடி அவைகளைத் தெளிவாய் வீணையில் பின்பற்றி வந்ததும் போற்றத்தக்க முறை. அவரது ஜயந்தஸ்ரீ ராகத்துக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். அதில் தானம் வாசித்தது விசேஷம். ரீதி கௌளையும், ஆரபியும் நல்வடிவங்களா யிருந்தன. ஆனால், தங்குதடை யில்லாத ஸ்தாயி சஞ்சாரசுதவுபடி கொண்ட குரல் பாக்கியம் படைத்தவராயினும் 'ஜனனி' கிருதியின் மேலேயே சிரமப்படாமல், கீழ் ஸ்தாயியிலும் உழைத்திருந்தால் அவர் கானம் இன்னும் சுகமா யிருந்திருக்கும்.

24உ. சென்னையி லிருந்து, அசாத்ய பிர்க்காவுடன், தெளிவும் வசீகர வழியும் கொண்டு அனுயாசமாய்ப் பொழிந்து வந்த ஒரு கானம் வியப்பைக் கொடுத்தது. கல்யாணியில் அமைந்த கற்பனை சஞ்சாரங்கள் கவர்ச்சியா யிருந்தன. கல்யாணவஸந்தமும், அதன் உருப்படியில் சேர்ந்த ஸ்வர ப்ரஸ்தாரங்களும் சுகமா யிருந்தன. அந்த சுகத்திலாழ்ந்துதான் 'அன்னொன்னை' கூட '''இந்த வரு பாடின வரு' சிந்தலபள்ளி

சாமசந்திரராவ் காரு!'' என்று எதுகை மோனை யுடன் அறிக்கையிட்டார் போலும்!

பி. எஸ். வேதாசலம் செட்டியாரின் பாட்டு, பிருகும், கலைகளைப்பும் கொண்டு, கேட்போரை எளிதில் உற்சாகத்திலாழ்த்தும் தன்மையது. பிப்ரவரி 26உ. சென்னையில் அவர், காம்போதியை ராகம், தானம், பல்ல விக்காக எடுத்துக் கொண்டு முக்கால் மணி நேரம் ஜமாய்த்தார்.

28உ. சென்னையில், வீணைக் கச்சேரி செய்த தேவகோட்டை நாராயணய்யங்கார் அவ் வாத்யத்தை உயர்ந்த ரகமாய்க் கையாளு பவர். அன்று அவர் வழங்கிய மந்தாரி, ஆனந்த பைரவி, ஹிந்தோள ராகங்களும், உருப்படிகளும் அழகு சித்திரங்களா யிழைந்தன.

மார்ச்சு 1உ. சென்னையில் நடந்த எம். எம். தண்டபாணி தேசிகரின் கச்சேரி எதிர் பார்த் ததுபோல் தரமாயிருந்தது. சங்கராபரணம் விரிவாயும் பாவப் பொழிவாயும் வெளி வந்தது. லதாங்கி, தேவமனோஹரி, காபி, இவை தவிர, கடைசியில் பாடிய ராகமாலிகை அனைத்தும் ஜோராயிருந்தன.

2உ. சென்னையில் பாடிய எஸ். ராஜம், சாதாரணமாய்க் கேட்காத பிரத்யேக பாணி கொண்டவர். எதையும் நயமாய் இழைத்து குறிப்பிடத்தக்க மெருகுடன் கையாளுபவர். அன்று அவரது குந்தலவராளிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். வராளியை விஸ்தாரமாய் வழங்கியது அவரது நிச்சய ஞானத்தை விளக்கியது. பல்லவி ராகமாம் தோடி அழகு சஞ்சாரங்களுடன் மனதை உருக்கியது.

3உ. சென்னையிலிருந்து கேட்ட கல்லிடைக் குறிச்சி ஹரிஹரய்யரின் கச்சேரி சென்ற வாரத்திய முதல்தர நிகழ்ச்சிகளில் ஒன்று. சாதாரணமாய் திருச்சியில் மூனுநேரக் கச்சேரி செய்பவர் அன்று சென்னையில் 40 நிமிஷங் கள்தான் பாடினர். பூர்விகல்யாணி அழகு பிடிகளுடன் விஸ்தாரமாய் வெளிவந்தது. சங்கராபரணம் அநுயாசமான சஞ்சாரங் களுடன் பாவப் பொழிவா யிலங்கியது. உருப்படிகளும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் பிருகாயிருந்தன.

*   *   *

பிப்ரவரி 27உ. திருச்சியிலிருந்து கேட்ட வி. சிவிவாஸனின் கானம் குறிப்பிடத் தக்கது. நடுத்தர சாரீரத்தின் நல் வழியாய் சங்கராபரணம், ஹம்ஸத்வனி, தோடி ராகங் களை இழைத்தார். கிருதிகளும் ஸ்வரப்ரஸ் தாரங்களும் கச்சிதமாயிருந்தன.

அன்று அதே நிலையத்தில் பாடிய ஸ்ரீரங்கம் ஆர். ரங்கநாதனுக்கு நய சாரீரம்; சுகவழி. சக்ரவாகம், ஸ்ரீரஞ்சனி, உதய ரவிச்சந்திரிகா ராகங்களும், உருப்படிகளும் வசீகரமா யிருந்தன.

28உ. சென்னையில் ஆர். ஸ்ரீனிவாஸனின் கானம் கவனத்தை யீழுத்தது. அவரது தோடியும், 'வெங்கடேசம்' என்ற கிருதியும் பாணி யழகு கொண்டு இலங்கின.

மார்ச்சு 12உ. திருச்சியிலிருந்து கேட்ட ஒரு கானம் சில விடங்களில் ஜி. என். பி. யின் வழியைப் பின் பற்றியதாய் மனதைக் கவர்ந்தது. மலையமாருதம், சங்கராபரணம், பந்துவராளி, கல்யாணி என்று ராகங்கள் சரமாரியாய்ப் பொழிந்து வந்தன. உருப்படிக ளெல்லாம் கச்சிதமாயிருந்தன. பாடியவர் ஆர். ராதாகிருஷ்ணன்.



ஏஜண்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜ வாடா; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

இடம் கிடைத்தது!

பி.எஸ்.

"ஏறுங்க, ஸார்! இடமில்லை, உம்...ரைட்!" என்று கண்டக்டர் சொன்னவுடன் பஸ் புறப்பட்டு விட்டது.

"கண்டக்டர்! ரொம்ப அவசரம். ஒரே ஒரு 'ஸீட்'......" என்று சொல்லிக் கொண்டே சேதுராமன் பஸ்ஸில் எப்படியோ தொத்தி, உள்ளே போய் நின்று கொண்டான்.

"இடமில்லேன்னு ஒரு தரம் சொன்னா, மனுஷத்தன்மை யுள்ளவனா யிருந்தா பஸ்ஸில் ஏறுவானா?—சட்!" என்று கண்டக்டர் முணுமுணுத்துக் கொண்டான்.

உடனே கடைசி ஸீட்டிலிருந்து 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. அது, சேதுராமன் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தது முதல் எந்தப் பெண்மணியைக் கண்டு தன் மனதைப் பறிகொடுத்து விட்டிருந்தானோ, அவளிட மிருந்தேதான் வந்தது! கேட்க வேண்டுமா, கோபம் வருவதற்கு?

"என்ன கண்டக்டர், ரொம்ப அலக்கிறயே! வண்டியே உனக்குச் சொந்தமென்ற எண்ணமோ? ஏதோ அவசரக் காரியம் என்று ஏறினால், மனுஷத்தன்மையாம், மண்ணாங்கட்டியாம்!" என்று தன் ஆத்திரம் தீரச் சடசட ஒரு 'டோஸ்' விட்டான் அவனுக்கு.

"வண்டியிலே இடமில்லேன்னா, என் ஐயா ஏறினாய்? இறங்கு, கீழே!" என்று சொல்லி, விசிலை எடுத்து ஊதினான் கண்டக்டர். பஸ் நின்றுவிட்டது. பாவம், சேதுராமன் பாடு தர்மசங்கடமாய்ப் போய் விட்டது.

"இறங்கு ஸார், கீழே! என்னமோ முறைக்கிறயே!" என்றான் கண்டக்டர்.

நல்ல வேளையாக, அப்பொழுது அந்தப் பெண்மணியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர், "ஐயா, நான் இறங்கிக் கொள்ளுகிறேன். அவர் வரட்டும், பாவம்!" என்று சொல்லிக் கீழே இறங்கிக் கொண்டார்.

சேதுராமன் அப்பெரியவரை மனதுக்குள் வாழ்த்திக் கொண்டே கண்டக்டரையும் மிடுக்காக ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்தப் பெண்மணியின் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளப் போனான். அந்தப் பொல்லாத கண்டக்டர், "பொம்பிளை பக்கத்திலே ஒக்காரக் கூடாது, ஐயா! நின்னுகிட்டேதான் வரணும்!" என்று அதிகார தோரணையில் ஒரு போடு போட்டான்.

"பரவாயில்லை, உட்கார்ந்து கொள்ளட்டும்!" என்றாள் அந்தப் பெண்மணி. சேதுராமனுக்குச் சந்தோஷம் 'ஜில்'லென்று ஒவ்வொரு நரம்பின் வழியாகவும் சென்று உடம்பையே ஒரு உலுக்கு உலுக்கியது.

"சரி, எங்கே போகணும்?" என்று கண்டக்டர் கேட்டபோது, "கன்டோன்மெண்டு" என்று இருவர் குரலும் சேர்ந்தாற்போல் ஒலித்தது.

"ஓஹோ! நீங்களும் கன்டோன்மெண்டுதானா?" என்று கேட்டுவிட்டு, "சரி, இரண்டு டிக்கெட்!" என்றான் சேதுராமன்.

"வேண்டாம், எனக்கு எதற்காக நீங்கள் டிக்கெட் வாங்க வேண்டும்?" என்று அப்பெண்மணி இடைமறித்துத் தன் பர்ஸிலிருந்து காசை எடுத்தாள்.

"இருக்கட்டும், பரவாயில்லை!" என்றான் சேதுராமன்.

சற்று நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது.


"'கன்டோன்மெண்டி'ல் தாங்கள் எங்கே இருக்கிறீர்களோ?" என்று மெதுவாகச் சம்பாஷணையை ஆரம்பித்தான் சேதுராமன்.

"வில்லியம்ஸ் ரோட்டில்!"

மீண்டும் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்துவிட்டு, "தங்கள் 'ஹஸ்பெண்டு'க்கு என்ன வேலையோ?" என்று தன் முழுத் தைரியத்தையும் திரட்டிக் கொண்டு ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான் சேது.

"எனக்கு 'ஹஸ்பெண்டு' இருந்தால் தானே அவருக்கு வேலை என்று ஒன்று இருக்கும்?" என்றாள் அவள்.

இந்த வார்த்தை சேதுராமன் செவிகளில் தேவாமிருதத்தையே பொழிவதுபோலிருந்தது. எதிர்பாராத அதிர்ஷ்டத்தைத் தனக்கு இறைவன் அள்ளிச் சொரிந்து



விட்டதாகவே அவன் எண்ணி இன்பக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்து விட்டான்!

★

"கன்டோன்மெண்டு! இறங்குங்கள், ஸார்!" என்றான் கண்டக்டர். இருவரும் இறங்கினார்கள்.

"'வில்லியம்ஸ் ரோட்' சற்றுத் தூரமாயிற்றே, நான் வேண்டுமானால் கொண்டு வந்து விடட்டுமா?" என்றான் சேதுராமன்.

"வேண்டாம், வேண்டாம்! தாங்கள் என்ன காரியமாக வந்தீர்களோ, பாவம்!" என்றாள் அவள்.

"நான் ஒரு காரியமாகவும் வரவில்லை. இங்கே 'வெங்கடா லாட்'ஜில் சாப்பிடுகிறேன். அதற்காகத் தினமும் வருகிறேன். அப்படியே கூட ஒரு எட்டு வந்து உங்களையும் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுப் போகிறேனே!" என்றான்.

"சரி, அப்படியானால் இரட்டிப்புச் சந்தோஷம்!" என்றாள் அந்தக் குறும்புக்காரி.

இருவரும் நடந்தனர். "என் குடித்தனம் ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லையோ?" என்றாள் அவள் வெகு அடக்கஒடுக்கமாக.

"ஹ்ஹ்ஹீ...... எனக்கு இன்னும் 'மேரேஜ்' ஆகவில்லை; 'பாச்சலர்' தான்! இங்கே காலேஜில் படிக்கிறேன். பி.ஏ.க்குப் பணம் கட்டியிருக்கிறேன். இந்த ஓட்டல் சாப்பாடுதான் என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளுகிறது. அதனால்தான் தினசரி இங்கே வருகிறது...!' என்று இழுத்தான் சேதுராமன்.

"'வில்லியம்ஸ் ரோட்'டில் உங்கள் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் இருக்கிறாரே, தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஆஹா! அந்த அழுமூஞ்சி தோசாமய்யர்தானே? நன்றாகத் தெரியும்! அந்தப் பழியிடம்தான் இரண்டு வருஷமாக நான் மாரடித்துக் கொண்டு வருகிறேனே! ஆச்சு, இன்னும் கொஞ்ச நாள்!" என்றான் சேதுராமன்.

"ஆமாம், இவ்வளவெல்லாம் சொன்னீர்கள், தங்கள் பெயர் என்னவென்று இதுவரை சொல்லவேயில்லையே!"

"சேதுராமன்!" என்று சொல்லிவிட்டு, "தங்கள் பெயர்?" என்றான் அவன்.

"'தங்கள், தங்கள்' என்று இந்த மரியாதையெல்லாம் வைத்தால் நான் சொல்ல மாட்டேன். 'உன்னுடைய' என்று



கேட்டால்தான் என்ன முழுகிப் போச்சு!" என்றான் அவன்.

"சரி, சரி; உன்னுடைய பெயர்......?"

"சீதாலட்சுமி!" என்றாள் அவள்.

அதற்குள் வீடு நெருங்கி விடவே, "சரி, இதோ வீடும் வந்து விட்டது. வாருங்கள், உள்ளே வந்து விட்டுப் போகலாம்!" என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த வீட்டுக்குள் நுழைந்தாள் சீதாலக்ஷ்மி.

சேதுராமனும் இன்ப எண்ணங்களில் மிதந்து கொண்டே அவளைப் பின் தொடர்ந்தான். ரேழியைத் தாண்டியவுடன் அவள் சரேலென்று உள்ளே சென்று விட்டாள். சேது காலிலிருந்த 'சடா'வைக் கழற்றி விட்டு வெகு ஒய்யாரமாகக் கூடத்தில் அடியெடுத்து வைத்தான். அங்கே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதரைப் பார்த்தவுடன் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் சாக்ஷாத் அவன் தமிழ்ப் பண்டிதர் சீதாராமய்யரேதான்!

சேதுராமனுக்குச் சேர்ந்தாற் போல் ஆயிரம் தேள்கள் கொட்டியது போலிருந்தது.

"எங்கேடா வந்தே, சேதுராமா! வா, உட்கார்!" என்றார் சீதாராமய்யர்.

"ஒன்றுமில்லை, ஸார்! ஒரு சந்தேகம்......" என்று ஆரம்பித்தான் சேது.

"என்ன சந்தேகம்?"

"அந்தப் 'பால் நினைந்தூட்டும் தாயினும்' என்ற திருவாசகப் பாடலுக்கு அர்த்தம் சரியாக விளங்கவில்லை, ஸார்!"

"அதுதான் அப்பொழுதே நடந்து விட்டதே, அதிலென்ன இப்பொழுது சந்தேகம்?"

"இதேதடா, சனியனை விலைகொடுத்து வாங்கின மாதிரி!" என்று நினைத்துக் கொண்டு, "இல்லை ஸார், பரீட்சைக்காகப் பாடங்களைத் திருப்பினேன், அப்போது ஏற்பட்டது!" என்றான் சேது.

"ஓஹோ, அப்படியா? சரி, கேள்!" என்று ஆரம்பித்து, அரைமணி நேரம் ஏதோ வளவளவென்று அளந்துகொண்டே போனார் அவர். 'தலையெழுத்தே' என்று அதைக் கேட்டுக்கொண்டிருந்த சேது, "இப்போது புரிந்து விட்டது, ஸார்! ரொம்ப வந்தனம். போய் வருகிறேன்!" என்று சொல்லி, 'உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும்' என்கிற நினைவில் தப்பித்துக்கொண்டு வெளியே வந்து விட்டான்.

★

அன்று இரவு முழுவதும் சேதுராமனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. "இந்தப் பெண், அந்த அழுமூஞ்சியின் பெண் என்று தெரியாமல் அதைப் பற்றிக் கண்டபடியெல்லாம் அவளிடம் திட்டிவிட்டேனே! அவளோ பலே கைகாரியாக இருக்கிறாள்! அவளிடமும் வேறு அசட்டுத்தனமாக நடந்துகொண்டு விட்டோமே! ஐயோ! இதையெல்லாம் அவள் அதனிடம் சொல்லாமல் இருக்க வேண்டுமே! அட ஈசுவரா......!" என்று பலவாறு எண்ணிச் சிந்தை கலங்கிக் கொண்டிருந்தான்.

மறுநாள் கல்லூரியில் தமிழ் வகுப்பு ஆரம்பமாயிற்று. சீதாராமய்யர் முகத்தில் எப்படி விழிப்பது என்று நடுங்கிக் கொண்டே தலையைக் கவிழ்ந்து கொண்டு புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சேதுராமன். ஒரு நிறுசாக ஒரு மணி நேரமும் ஆகி, வகுப்பும் முடிந்தது. மாணவர்கள் எல்லோரும் எழுந்து அடுத்த வகுப்புக்குப் புறப்பட்டார்கள். விடுதலையடைந்த குற்றவாளியைப் போல் சேது

ராமனும் எல்லோருடனும் புறப்பட்டான். ஆனால் அவர் விட்டாரா? "சேதுராமா, இங்கே வா!" என்றார்.

அவ்வளவுதான்; சேதுராமனுக்குத் தலை சுழல்வது போலிருந்தது. கைகால்கள் தையற்காரன் துணியைப் போல் நடுங்க ஆரம்பித்தன. மெதுவாக மேஜையை நெருங்கினான்.

"பலே கைகாரப் பயலடா, நீ!" என்றார்.

"என்ன ஸார்!" என்றான் சேதுராமன், அசட்டுச் சிரிப்புடன்.

"எப்பேர்ப்பட்ட வரனையும் தட்டிக் கழித்துக்கொண்டு வந்த அந்தப் பெண்ணை எப்படியோ சொக்குப் பொடி போட்டு மயக்கி விட்டாயே!" என்றார் அவர்.

"எந்தப் பெண்?"

"அட, ஒன்றுமே தெரியாதோ உனக்கு? அதுதானடா, நேற்று ராத்திரி அழைத்து வந்தாயே, எங்கள் வீட்டுக்காரர் ராவ் சாஹிப் சேஷய்யரின் பெண் சீதாலக்ஷ்மி, அவள்தான்! ராத்திரி முழுவதும் 'கல்யாணம் செய்து கொண்டால் அவனைத் தான் செய்து கொள்வேன்!' என்று அவள் தன் அப்பாவிடம் ஒரே பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்து விட்டாளே!" என்று ஏதேதோ பேசிக்கொண்டே போனார்.

கேட்க வேண்டுமா, மிஸ்டர் சேதுராமனின் மன நிலையைப் பற்றி! "அடுத்த வகுப்புக்கு நாழியாகிறது, போகிறேன்!" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து நீட்டினான் கம்பி.

★

அடுத்த சித்திரை மாதம் பி. ஏ. யில் முதலாவதாகத் தேறிய சிரஞ்சீவி சேதுராமனுக்கும் ராவ்சாஹிப் சேஷய்யர் அவர்களின் ஏகபுதல்வி சௌபாக்கியவதி சீதாலட்சுமிக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று இரவு ஊர்வலத்துக்காக நிறுத்தப்பட்டிருந்த காரில் மணப்பெண்ணுக்கு அருகில் 'குஞ்சும் குளுவா'னுமாக இடமில்லாமல் அடைத்துக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் காரில் ஏற வந்த மாப்பிள்ளை சேதுராமன், அந்தக் குழந்தைகளைக் கேட்கும் பாவனையாக, 'ஒரே ஒரு ஸீட்'......?" என்று பரிதாபமாகக் கேட்டான்.

சௌபாக்கியவதி சீதாலக்ஷ்மி இதைக் கேட்டதும் 'களுக்'கென்று சிரித்தாள்!

படித்துப் பார்!

நேதாஜி போர்முனைக் கடிதங்கள்

[தொகுத்தவர்: க. ராமச்சந்திரன், கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை; விலை: ரூ. 1—8—0.]

நாற்பது கோடி மக்களின் நல்இருதய கமலங்களிலிருந்து பொங்கி எழும் சுதந்திர ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் 'ஜெய் ஹிந்த்' என்ற சுலோகத்தையும், அதன் காரணகர்த்தாவான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெயரையும் உச்சரிக்கும்போதே சோர்வடைந்த உள்ளத்திலும் ஒரு தனி சக்தி பிறக்கிறது. எனவே, அத்தகைய மகிமை வாய்ந்த நேதாஜி சம்பந்தமான எவ்விஷயத்துக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு.

அம் மகான் இந்திய சுதந்திரப் போர் முனையிலிருந்தும் பாங்காக், ரங்கூன் முதலிய இடங்களிலிருந்தும் எழுதிய எட்டு கடிதங்கள் அவருடைய ஸ்வஹஸ்த லிகிதத்துடன் புத்தக ரூபமாக வெளியாகியிருக்கின்றன.

இக் கடிதங்கள் நேதாஜி அவர்களால், மலாயாவிலேயே சிறந்த பொதுஜன ஊழியரும், சேவையையே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருப்பவருமான பிரம்மசாரி கைலாஸம் அவர்களுக்கு எழுதப் பெற்றவை. (ஸ்ரீ பிரம்மசாரி கைலாஸம், டில்லியில் நடக்கப்போகும் ஆசிய நாடுகள் உறவு மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக, சமீபத்தில் மலாயாவிலிருந்து வந்துள்ள பிரதிநிதிக் கோஷ்டித் தலைவராவார்)

"சிறிதும் சோர்வின்றி சுதந்திரப் போரை நடத்துவோம்; வெற்றி பெறுவோம்; விடுதலை அடைவோம்!"—நேதாஜியின் ஒவ்வொரு கடிதத்திலுமுள்ள சாரம் இதுதான்.

நேதாஜியின் கையெழுத்திலேயே அவரது வாழ்க்கைக் குறிப்புகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

இப் புத்தகம் நேதாஜி போஸின் 51-வது ஜயந்தி வைபவ ஞாபகார்த்தமாக மலாயாவில் பிரசுரிக்கப் பெற்றதாகும். இந்தப் புத்தக விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை சமீபத்தில் மலாயாவில் நிர்மாணமாகும் "நேதாஜி மந்திர"த்துக்கு நிதியாக அளிக்கப்படும் என்று இதன் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்காவின் அரசியல்

[ஆசிரியர்: ஆசாரிய கிருபளானி; தமிழாக்கம்: கா. திரவியம்; பிரசுரம்: நவயுகப் பிரசுராலயம், சென்னை 5; விலை: ரூ. 2-0-0.]

தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் எழும் பிரச்னைகளாயினும் சரி, சமூக—தேசிய—சர்வ தேசியப் பிரச்னைகளாயினும் சரி, எல்லாவற்றையும் அழியாத அமைதியுடன் தீர்த்து வைக்க வல்லது காந்திஜியின் சர்க்கா அரசியல் முறைதான் என்பதை இந்நூலில் நமது ராஷ்டிரபதியான ஆசாரிய கிருபளானி உபமான உபமேயங்களுடன் விவரித்திருக்கிறார். "குடிசைக் கைத்தொழில் பரவிவிட்டால், மக்கள் வெற்றுத் தவளைகள் போல் ஆகி விடுவார்கள்!" என்று வாதிப்பவர்களுக்கும் தக்கவாறு பதில் அளித்திருக்கிறார். மொழி பெயர்ப்பாசிரியரான ஸ்ரீ கா. திரவியத்தின் ஓட்டமாய் ஓடும் தமிழ்நடையைப் பார்க்கும்போது, யாரும் இந்தப் புத்தகத்தைப் பூராவும் படிக்காமல் கீழே வைக்க முடியாது போலிருக்கிறது.

நரம்புகள் உங்களை தூங்கவிடாமல் விழித்திருக்கும்படி செய்யும்பொழுது:



சகல மருந்து வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

சுக நித்திரை இல்லாத இரவுகள் உங்கள் ஆரோக்யத்துக்கு விரைவில் நஷ்டமே விளைவிக்கின்றன. தினம் காலையில் பலக் குறைவில்லாமலும், உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க நீங்கள் இரவு நேரத்தில் அயர்ந்த சுக நித்திரை அநுபவிக்கவேண்டும். இதனால் நீங்கள் உங்களுடைய நரம்புகளை சரியான நிலைமையில் வைத்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

உங்கள் தேகத்தையும் மூளையையும்போல் நரம்புகளுக்கும் போஷாக்கு தேவை. இதை நறுமணமுள்ள ருசிகரமான டானிக் உணவு பானமான 'ஓவல்டின்' அளிக்கிறது. படுக்கைக்குப் போகுமுன் ஒரு கோப்பை "ஓவல்டின்" அருந்துங்கள். நரம்புகளை சமனப்படுத்தி, காலையில் பலக் குறைவில்லாமலும், உற்சாகமாகவும், சுறுசுறுப்புடனும் எழுந்திருக்கச் செய்யும்படியான அயர்ந்த நித்திரை அளிப்பதில் அது சிகரற்றது.

"ஓவல்டின்" பழுத்த பார்லிமால்ட், புதிய ஏடுடன் கூடிய பசுவின்பால், மிக மதிப்புள்ள இயற்கை விடமின்கள், மற்றும் இதர ஆகார சத்துக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. உங்களை வீர்யமும் ஆரோக்யமும் உள்ளவர்களாக இருக்கச் செய்யவேண்டிய ஆகார சத்துக்களை அது உடையது. போலிகளை விலக்குங்கள்.

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ (இந்தியா) லிட்., த. பெ. நெ. 1205, மதராஸ்; பம்பாயிலும், கல்கத்தாவிலும்:
தி இங்கிலீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாப்பரேடிவ் ஹோல்ஸேல் சொஸைடி லிட்., கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

'ஓவல்டின்'

'OVALTINE பலவிருத்தி ஆகார பானம்'



"ஓவல்டின்" அயர்ந்த சுக நித்திரையை அளிக்கிறது

OV/106

வாழ்க்கைத் தத்துவம்

ரா. வீழிநாதன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை மணி மூன்று இருக்கும். நாங்கள் நாலைந்து பேர், மாகாணக் கல்லூரித் தத்துவப் பேராசிரியர் கோபால சாஸ்திரியின் வீட்டில் அமர்ந்து தத்துவ விசாரத்தில் ஈடுபட்டிருந்தோம்.

அப்பொழுது அவர் வீட்டு வேலைக்காரப் பையன், ஒரு 'விஸிட்டிங் கார்'டை அவரிடம் கொண்டுவந்து கொடுத்தான். அதைப் பார்த்த அவர், "யாரோ ராமானந்த சர்மா என்ற தத்துவ நிபுணர் ஒருவர் வந்திருக்கிறார். என்னைப் பார்க்க வேண்டுமாம். உள்ளே வரச் சொல்லட்டுமா?" என்றார்.

"தாராளமாய் வரச் சொல்லுங்கள். ஞாயிற்றுக்கிழமை பொழுது போக வேண்டுமோ, இல்லையோ! அவருடைய தத்துவ ஆராய்ச்சியைப் பற்றியும்தான் நாம் தெரிந்து கொள்ளுவோமே!" என்று நாங்கள் எங்கள் ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம், கையில் தோல் பையுடன் ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் கைகூப்பி, "உங்களுக்குச் சிரமம் தருகிறேன். மன்னிக்க வேண்டும்" என்றார்.

சாஸ்திரி, "அதெல்லாம் சிரமம் ஒன்றுமில்லை. வாருங்கள், உட்காருங்கள்!" என்று வரவேற்று உட்காரவைத்த பின், "தங்களுக்கு எந்த ஊரோ?" என்று விசாரித்தார்.

"எனக்கா? திருச்சிறாப்பள்ளி. உங்களைப் பற்றி ரொம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குத் தத்துவ விஷயங்களில் கொஞ்சம் பிரமை உண்டு. அதனால்தான் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று புன்முறுவலுடன் வினயமாகப் பதில் அளித்தார் அவர்.

"அப்படியா? நீங்கள் தத்துவத்தில் யார் யாரைப் படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் சாஸ்திரி.

"ராதாகிருஷ்ணன், ஹக்ஸ்லி முதலியவர்களைப் படித்திருக்கிறேன்."

"ரொம்ப சந்தோஷம்."

"என்ன இருந்தாலும் நம் பாரதநாடுதான் தத்துவத்தில் ரொம்ப முன்னேறியிருக்கிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"தத்துவத்தில் மட்டும் என்ன? எதிலுமே, நம் நாட்டிற்குப் பிறகுதான் மற்ற நாடுகள் எல்லாம்!" என்றார் சாஸ்திரி.

"நன்றாகச் சொன்னீர்கள்! நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. ஆமாம், உட்கார்ந்திருக்கும் நண்பர்கள் கூடத் தத்துவத்தில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள் என்றே நம்புகிறேன்."

"ஆமாம், உங்களிடமிருந்து தத்துவ சம்பந்தமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்."

"உங்களைப் போன்ற அறிஞர்களுக்கெதிரில் என்னுடைய பேச்சு எந்த மூலைக்கு? இருந்தாலும் ஏதோ தெரிந்த வரையில் சொல்லுகிறேன். தெரியாததை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன். — ஆமாம், 'மனிதன் ஏன் பிறக்கிறான்?' என்பதுபற்றி உங்களில் யாராவது சிந்தனை செய்ததுண்டா?"

"சிந்தனை செய்வானேன்? வாழ்வதற்காக என்பதுதான் கண்கூடாகத் தெரிகிறதே!" என்றேன் நான்.

"அது மட்டும் அல்ல, இன்னும் சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தீர்களானால் வேறொரு உண்மையும் தெரியவரும்."

சிறிது நேரம் நாங்கள் மௌனம் சாதித்தோம். ஒருவருக்காவது வேறு பதில் சொல்ல முடியவில்லை. நாங்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தோம்.

"உங்களைக் கேள்வி கேட்டுச் சிரமத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்பது என் நோக்கமல்ல. என்னுடைய கேள்விக்கு நானே பதில் சொல்லி விடுகிறேன். மனிதன் சாவதற்காகப் பிறக்கிறான்! என்ன சாஸ்திரி ......?" என்றார் அவர்.

எங்கள் எல்லாருக்கும் அது ஒருவிதத்தில் உண்மையென்றே பட்டது.

"செத்த பின் என்ன ஆகிறான்? மறுபடியும் பிறக்கிறான். பிறவியும் சாவும், சாவும் பிறவியும் மனிதனோடு கூடப் பிறந்தவை. 'இறக்கும் மனிதன் அதே குடும்பத்தில் மறுபடியும் பிறக்கிறான்; மறு பிறவி கட்டாயம் உண்டு' என்பது ஹிந்து தர்மத்தின் கொள்கை. என்ன, நான் சொல்லுவது உண்மைதானே ......?"

"பிறப்பு, இறப்பு இந்த இரண்டுக்கும் மத்தியில் மனிதன் வாழ வேண்டியிருக்-

கிறது. 'வாழ்வதற்காக' என்று நீங்கள் சொன்னதும் ஒருவிதத்தில் உண்மையே!- ஆமாம், இன்னுமொரு கேள்வி கேட்கிறேன் ...... வாழ்வதற்கு அத்தியாவசியமானது எது?''

''மூச்சு!''

''இல்லை ஸார், இல்லை. அதை விட முக்கியமானது பொருள். பொருள் இல்லையேல் மனிதன் எப்படி உயிருடன் வாழ முடியும்? — நீங்களே சொல்லுங்கள். — பிறப்பின் தத்துவம் மரணம் என்பதை முன்னமேயே கூறினேன். வாழ்வின் தத்துவம் பொருளீட்டல் என்பதை இப்பொழுது தான் சொன்னேன். என்ன, நான் சொல்வதில் பிழையொன்றும் இல்லையே!''

''இல்லை, இல்லை!'' என்றவாறு நாங்கள் அனைவரும் வியப்புடன் அவரையே உற்று நோக்கியவண்ணம் உட்கார்ந்திருந்தோம்.

''மனிதன் எப்பொழுதுமே திடகாத்திரனாக இருந்து விடுவதற்கில்லை. திடகாத்திரனாக இருக்கும்பொழுதுதான் அவனால் பொருள் ஈட்ட முடிகிறது. மூப்பு அதிகரித்து விட்டால் அவன் ஒன்றுக்கும் உதவாக் கரையாகி விடுகிறான். ஆகையால் பொருள் ஈட்டுவது மட்டும் போதாது. சேமித்தும் வைக்க வேண்டும். என்ன நான் சொல்வது?......''

''ஆமாம், ஆமாம்; நீங்கள் சொல்வது அவ்வளவும் உண்மைதான்!'' என்று நாங்கள் அவர் சொல்வதை ஆமோதித்தோம்.

''......இதற்கு ஒரே ஒரு சுலபமான வழி இருக்கிறது. அந்தச் சுலபமான வழியை நாம் கடைப்பிடித்தோமானால், வாழ்க்கையில் நாம் எப்போதுமே கஷ்டத்துக்கு உள்ளாக வேண்டியிராது! நான் சொல்லும் இந்த வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து, இங்கேயிருக்கும் நீங்கள் அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற அளவு பொருள் சேமிக்க இன்றே முற்பட வேண்டும். அதற்குச் சுலபமான வழி எங்கள் கம்பெனியில் ஒரு 'இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி' எடுத்துக் கொள்ளுவது தான்!'' என்று கூறித் தம் தோல் பையிலிருந்து, சில 'இன்ஷ்யூரன்ஸ் பாரம்'களை எடுத்து மேஜைமீது வைத்தார் அவர்!

அவ்வளவுதான்; நாங்கள் அனைவரும், ''வாழ்க்கைத் தத்துவம் எப்படி?'' என்ற கேள்விக் குறியை ஒவ்வொருவர் முகத்திலும் போட்டுக் கொண்டு ஒருவரை யொருவர் பார்த்து விழிக்கலானோம்.



மறக்கவேண்டியது!

பெரியவர்:—வர வர எனக்கு ஞாபகமறதி அதிகமாய்ப் போய் அதுவே பெரிய கவலையாய் வாட்டுகிறது, ஐயா!

''அப்படியா? அதையெல்லாம் அடியோடு மறந்துட்டு சந்தோஷமா இருங்கோ!''

★

நல்ல ருசு!

நீதிபதி:—உன் மனைவி சிப்பல் தட்டை வீசி உன் மண்டையை நசுக்கினாள் என்று கூறுகிறாய்?

புருஷன்:—ஆமாம், பிரபு!

நீதிபதி:—அப்படியானால் உன் மண்டையில் அடிபட்டதற்கு எந்தவித அடையாளமும் காணோமே?

புருஷன்:—சரி சரி, தாங்கள் அந்தச் சிப்பல் தட்டைப் பார்க்கவில்லைபோலிருக்கிறது!

★

வெற்றியின் ரகசியம்

வைத்திய மாணவன் (பெரிய டாக்டரிடம் சென்று):—ஸார், நான் டாக்டர் பரீக்ஷை பாஸ் செய்து விட்டேன். பிராக்டிஸ் ஆரம்பிக்க வேண்டும். வைத்தியத் துறையில் வெற்றியடைய நான் முக்கியமாக என்ன செய்யவேண்டும்?

டாக்டர்:—எப்போதும் 'ப்ரிஸ்க்ருப்ஷன்' எழுதும்போது பிறருக்குப் புரியாமல் எழுத வேண்டும்; 'பில்' அனுப்பும்போது மட்டும் தெளிவாக எழுதவேண்டும்.

★

நல்ல யோசனை

தம்பி:—அண்ணா, நீ வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி யனுப்புவது தானே?

அண்ணன்:—ஏண்டா, அதில் என்ன உனக்கு அவ்வளவு அக்கறை?

தம்பி:—இல்லை, அண்ணா! அந்தக் கதைகள் திரும்பி வரும்போது அந்தந்த நாட்டு ஸ்டாம்பு ஒட்டி வரும். அதையெல்லாம் சேர்த்து நான் ஸ்டாம்பு ஆல்பம் செய்யலாம் அல்லவா?


★

விஞ்ஞான விஷயம்

காப்பி சாப்பிடுபவர்:—என்ன ஐயா, இந்தக் காப்பியில் கரித் துண்டு மிதக்கிறதே!

சர்வர்:—இதில் என்ன ஆச்சரியம், ஸார்! காப்பியில் கரித் துண்டு மிதக்கத்தான் மிதக்கும். நீங்கள் 'ஸயன்ஸ்' படித்ததில்லையோ?

வைர விழாக் காட்சிகள்







(1) சென்ற பிப்ரவரி மீ 14 15, 16உ களில் திருச்சி நேஷனல் காலேஜின் அறுபதாம் ஆண்டு வைரவிழா நடைபெற்ற போது, கல்லூரிக் கட்டிடங்கள் தீபாலங்காரத்தினால் ஜொலித்தன.

(2) கல்லூரித் தலைவர் ஸ்ரீ ஏ. ராமய்யர் வைரவிழா அறிக்கையை வாசித்தார்.

(3) கல்லூரி மாஜித் தலைவர் ஸ்ரீ வி. சாரநாத அய்யங்கார் விழாவுக்கு வந்தவர்களை வரவேற்றார்.



வைர விழாவை யொட்டி, மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் பல நடைபெற்றன.



டாக்டர் ஸர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் விழாவுக்கு அக்கிராசனம் வகித்தார். ஸர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் வைர விழாப் பிரசங்கம் செய்தார்.



ஸ்ரீமதி அமிருதா சுப்பிரமண்யம் மாணாக்கர்களுக்குப் பரிசு வழங்கினார்.



ஜில்லா கலெக்டர் ஸ்ரீ வர்க்கீஸ் பயிற்சிப் படைக்கு வெள்ளிக் கோப்பை அளித்தார்.

இத்தகைய கோலாகலங்களுடன் வைர விழா சிறப்பாக நடந்தேறியது.

உலகத்தை சிருஷ்டித்தது பிர்மா
பிர்மாவுக்கு உகந்தது பிர்ம பத்திரம்
பிர்ம பத்திர மென்பது புகையிலை
பிர்மாவின் மக்கள் — உலகத்து மாந்தர்
விரும்பி உபயோகிப்பதும் பிர்மா மார்க்
புகையிலையே,

★

திருவாரூர் A. N. இரத்தினம் & கோ.

பிர்மா மார்க் புகையிலைக்கு

சென்னை ஏஜண்ட்:

சந்திரா ஏஜென்ஸி

9, பிராட்வே :: சென்னை

விர்கோவின் 1947 ஞாபகத்திய மகத்தான வெளியீடுகள்!

P. U. சின்னப்பா P. கண்ணாம்பா

மற்றும் பலர் நடிக்கும்

துளஸி ஜலந்தர் (தமிழ்)

(தஞ்சை ஜில்லாவிற்கு காரைக்கால் உள்பட)

★

தெய்வ நீதி (தமிழ்)

(திருச்சி, தஞ்சை ஜில்லாவிற்கு காரைக்கால் உள்பட)

P. கண்ணாம்பா

K. R. ராமசாமி **V. A. செல்லப்பா**
N. R. சகுந்தலா **T. S. துரைராஜ்**

மற்றும் பலர் நடித்தது

விவரங்களுக்கு:

விர்கோ பிலிம்ஸ்

தெப்பக்குளம் :: திருச்சி

கம்பர் தரும் காட்சி

172. லங்கேசுரன், அவன்!

டி. கே. சி

சன்னியாசியாயும் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டும் தளர்ந்த நடையினனாயும் வந்த ராவணனை ஆசனமிட்டு உட்காரச் செய்தாள் சீதை.

சன்னியாசியும் "யாரம்மா நீ, தெரியவில்லையே! கொஞ்சம் சொல்ல வேண்டும்" என்றான்.

ஜனக மகாராஜாவின் ஏக புத்திரி என்றும், பெயர் ஜானகி என்றும், காகுத்தனது மனைவி என்றும் தன்னைச் சொல்லிக் கொண்டாள். சன்னியாசி பரிவுடன் கேட்டுக் கொண்டிருந்தான். சன்னியாசியிடம் சீதைக்குப் பரிதாபம் உண்டாய் விட்டது.

அவ்வழி அனையன
உரைத்த ஆயிழை,—
'வெவ்வழி வருந்தினிர்,
விளைந்த மூப்பினிர்,
இவ்வழி இருவினை
கடக்க எண்ணினிர்,
எவ்வழி நின்றும் இங்(கு)
எய்தி னீர்' என்றான்.

[அவ்வழி அனையன உரைத்த ஆயிழை: அப்படி யெல்லாம் பேசிய சீதை; வெவ்வழி வருந்தினிர்: வெப்பமாகிய காட்டின் வழி வந்து கஷ்டப்பட்டீர்; விளைந்த மூப்பினிர்: வயசோ மிகவும் தள்ளாடிய பருவம்; இவ்வழி இருவினை கடக்க எண்ணினிர்: இகத்திலேயே பூர்வமான நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் கடந்து முத்தி அடைய எண்ணினவராய் இருக்கிறீர்; எவ்வழி நின்றும் இங்கு எய்தினீர்: எந்த இடத்திலிருந்து புறப்பட்டு இங்கே வர நேர்ந்ததோ, தயவுசெய்து சொல்ல வேண்டும்.]

* * *


"சன்னியாசியாய் இருக்கிறாரே' எந்த முனிவர் ஆசிரமத்திலிருந்தோ, தீர்த்த கட்டத்திலிருந்தோ வருகிறார், அதை யெல்லாம் பற்றி விஸ்தாரமாகப் பேசுவார்" என்று சீதை எதிர்பார்த்தாள். ஆனால் சன்னியாசி எடுத்த பேச்சு வேறு வழியில் போகிறது.

'இந்திரற்(கு) இந்திரன்,
எழுத லாகலாச்
சுந்தரன், நான்முகன்
மரபில் தோன்றினான்,
அந்தரத் தோடும்எவ்
உலகும் ஆள்கின்றான்,
மந்திரத்(து) அருமறை
வைகும் நாவினான்!

[இந்திரற்கு இந்திரன்: ஒரு சக்கரவர்த்தி, இந்திரனுக்கு இந்திரன்; எழுதலாகலாச் சுந்தரன்: சித்திரத்தில் எழுதமுடியாத அவ்வளவு அழகு வாய்ந்தவன்; நான்முகன் மரபில் தோன்றினான்: பிரமனது குலத்தைச் சேர்ந்தவன், அதாவது சகல கலைகளிலும் வல்லவன்; அந்தரத்தோடும் எவ் உலகும் ஆள்கின்றான்: எல்லாக் கண்டங்களையும் ஆள்கின்றான் என்று சொன்னால் போதாது, வானுலகத்தையுமே உட்படுத்தி ஆளுகிறான் என்று சொல்ல வேண்டும்; மந்திரத்து அருமறை வைகும் நாவினான்: மந்திரத்தை ஜெபித்த மாதிரி பக்தி மயமான பாடல்களைப் பாடிக் கொண்டே இருப்பவன்.]

* * *

"இன்னும் கேள்: சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் கைலையங்கிரி



"என்ன ஸார், இவரு இந்தமாதிரி கையை மடக்கிக்கிட்டுக் குந்திக் குந்தி தானம் போடறாரே?"

"அவர் ஒரு போஸ்ட்மேனுங்க! அதான் அப்படித் தானம் போடறார்!"

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பலிக்கவில்லை!

1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இந்திய சர்க்கார் காங்கிரஸ தலைவர்களை யெல்லாம் கைது செய்து கொண்டு போய் அஹமது நகர்க் கோட்டையிலே சிறை வைத்தார்கள்.

அந்த சிறை யிருந்தவர்களிலே டாக்டர் பட்டாபி சீதாராமையாவும் ஒருவர். அவர் அந்த நடந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தைச் சொல்லுகிறார்:

சிறையில் எலி உபத்திரவம் ரொம்ப அதிகமாக இருந்ததாம். டாக்டர் பட்டாபியும் மற்ற தலைவர்களும் ரொம்பச் சிரமப்பட்டு ஒரு எலிப் பொறியை வாங்கிக் கொண்டு வந்து வைத்தார்களாம். முதல் இரண்டு மூன்று நாள் பொறியில் ஒரு எலியும் விழவில்லை நாலாவது நாள் காலையில வந்து பார்த்தபோது பொறியின் வாய் மூடி யிருந்தது. உள்ளே சத்தமும் அதி-மா யிருந்தது. "சரி, ஒரு பெரிய எலி அகப்பட்டுக் கொண்டது!" என்று எல்லோரும் ரொம்பச் சந்தோஷப் பட்டார்கள். ஆனால், என்ன ஆச்சரியம், பொறியை மேலே தூக்கிப் பார்த்த போது, அது எலி இல்லை, பூனை!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யைச் சில்லு வேருடன் சேர்த்துப் பறித்தெடுக்கும் சக்தி வாய்ந்தவன். அஷ்ட திக்கு யானைகளின் பிரும் மாண்டமான தந்தங்களைப் பொடி செய்யக்கூடிய தோள் பலம் உடையவன்!"

'ஈசன் ஆண்(டு) இருந்தபேர்
　　இலங்கு மால்வரை
வேரொடு பறித்(து)
　　எடுக்கும் நற்றத்தான்;
ஆசைகள் சுமந்தபேர்
　　அளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப்
　　பொடிசெய் தோளினான்.'

[ஈசன் ஆண்டு இருந்த: சிவபெருமான் வீற்றிருந்த: பேர் இலங்கு மால்வரை: மிகப் பெரிதாய் வானத்தை அடைந்து விளங்கும் வெள்ளியங்கிரியை; நற்றத்தான்: சக்தி வாய்ந்தவன்; ஆசைகள் சுமந்த: எட்டுத் திசைகளிலும் நின்று பூமியைச் சுமந்துள்ள; பேர் அளவில் யானைகள்: பெரிய பிரும்மாண்டமான யானைகளது; பூசல் செய் மருப்பினை: எதிர்த்து யுத்தஞ் செய்வதற்கான தந்தங்களை.]

***

"அவனைப் பேட்டி காணுவதற்காக ஆசார வாசலில் மொய்த்து நிற்பவர் யார் தெரியுமா? தேவர்களே. அவனுடைய பெருமையைச் சொல்லப் புகுந்தாலோ, பாஷையே பழுது பட்டு விடும். அவனது கையில் என்ன இருக்கிறது தெரியுமா? கற்பக தரு, சங்க நிதி, பதும நிதி இவைகள்தான்.

'நிற்பவர் கடைத்தலை
　　நிறைந்து,—தேவரே;
சொல்பழுதும்,—மற்றவன்
　　பெருமை சொல்லுங்கால்;
கற்பகம் முதலிய
　　நிதியம்,—கையன;
பொற்பக மாவநீர்
　　இலங்கை,—பொன்நகர்.'

[நிற்பவர் கடைத்தலை நிறைந்து: ஆசார வாசலில் மொய்த்து நிற்பவர்; மற்று அவன் பெருமை சொல்லுங்கால்: அவனுடைய பெருமையைச் சொல்ல ஆரம்பித்தால்; சொல்பழுதும்: சொல்லானது பழுதுபட்டுப் போய் விடும். அதாவது வார்த்தையினால் எடுத்துச் சொல்ல முடியாதது; கற்பகம் முதலிய நிதியம் கையன: கற்பக தரு, சங்க நிதி, பதுமநிதி இவைகள் அவன் கைக்குள் அடங்கி நிற்பன. அதாவது அவனுடைய வள்ளன்மை அவ்வளவு அபாரம்; பொற்பக மாவநீர் இலங்கை: அழகு மயமான நீர் வளங்கொண்ட இலங்கைதான் அவனுக்குத் தலைநகரம்.]

அரசர்களைப் பற்றியும் அவர்களுடைய வீரப் பிரதாபங்களைப் பற்றியும் ராஜாங்கப் பெருமிதங்களைப் பற்றியும் பேசினால் பெண்களுடைய மனசுக்கு உவந்ததாய் இருக்கும் என்ற எண்ணத்தோடு, கவிதா சம்பிரதாய ஆடம்பரங்களுடன் பேசுகிறான் சன்னியாசி.

ராவணனுடைய பேச்சு, நல்ல பாவ ரூபங்களோடு கூடிய பாடல்களாய் அமைந்து கிடக்கிறது!

கிளி விடு தூது

வேங்கடலக்ஷ்மி

"அக்கா, அக்கா! எதிராத்து மாமா கூடச் சொல்றார் அக்கா, பாவம்னுட்டு!" என்று கூறிக்கொண்டே, கயிற்றில் கட்டப்பட்டிருந்த நாய்க்குட்டியைக் காகாவென்று இழுத்துக்கொண்டு உள்ளே வந்தான் வேணு.

தாழ்வாரத்தில் தொங்கிக் கொண்டிருந்த கிளிக் கூண்டின் அருகே நின்றபடி தலை கோதிக் கொண்டிருந்த ராதை அவனைத் திரும்பிப் பாராமலேயே, "நானும்தான் நாலு நாளாகச் சொல்லுகிறேன், அந்த நாய்க் குட்டியை இம்சிக்காதேடா, மகா பாவம்னு!—நீ கேட்டால்தானே? உனக்கு வீட்டில் இருக்கிறவா சொன்னா மண்டையிலே ஏறாது; எதிராத்து மாமா, அண்டை வீட்டு மாமா இவர்களெல்லாம் சொன்னால்தான் ஏறும்!" என்று எரிந்து விழுந்துவிட்டு, மீண்டும் தலை மயிரைச் சிக்கெடுக்கலானாள்.

"இல்லை, அக்கா! அந்த மாமா நாய்க் குட்டியைப் பத்திச் சொல்லலை. நீ வந்து அந்தக் கிளியைப் பிடிச்சுக் கூண்டிலே அடைச்சு வைச்சிருக்கையே, அதையாக்கும் சொன்னார்!" என்று விஷயத்தை விளக்கினான் வேணு.

ராதையின் முகம் சிவந்தது. "சட், அசத்து! என்னுடைய கிளியைப் பற்றி அந்த மாமாவுக்கு என்னடா அவ்வளவு அக்கறை? அவர் சொன்னாராம், அதைப் போய் என்னிடம் சொல்ல வந்துவிட்டான்!" என்று கோபத்தோடு அவன் காதைப் பிடித்து ஒரு முறுக்கு முறுக்கினாள்.

வேணுவுக்கு அழுகை வந்து விட்டது. அதை மறைப்பதற்காக அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "என்னை அடிச்சையோ, இல்லியோ? இன்னும் அந்த மாமா சொன்னதையெல்லாம் நான் உன்னண்டை சொல்றேனா, பாரு!" என்று அழுகைக் குரலில் உரத்துச் சொல்லிவிட்டு, நாய்க் குட்டியின் கயிற்றைப் பிடித்துக் காகா வென்று இழுத்துக் கொண்டே வாசலுக்குப் போனான் அவன்.

ராதையும் அவனைத் தொடர்ந்து ஓடி எடுத்து வைத்தாள். அதற்குள் ஏதோ நினைவுக்கு வரவே, சட்டென்று நின்று விட்டாள்.

★

முதல் நாள் நடந்த விஷயம் அது. சாயந்திர வேளை. தட்டு நிறைய நித்திய மல்லிகை மொட்டுக்களைக் குவித்துக் கொண்டு, வாசற் பக்கத்து அறையின் ஜன்னல் திட்டின்மேல் உட்கார்ந்து பூத் தொடுத்துக் கொண்டிருந்தாள் ராதை. அவளுக்கு எதிரே இருந்த மேஜையின் மீது கிளிக் கூண்டு வைக்கப்பட் டிருந்தது.

உள்ளே இருந்த பச்சைக் கிளி அரைக் கண்ணை மூடித் தலையைச் சாய்த்துக் கொண்டு தன்னைப் பார்ப்பதைக் கண்டதும், ராதைக்குச் சிரிப்பு வந்து விட்டது. 'களுக்' கென்று சிரித்து விட்டாள்.

"ஒரு கிளியைப் பத்து நாட்கள் கூண்டில் அடைத்து வைத்திருந்ததற்காக, மறு ஜன்மத்தில் மகா பக்தரான ராமதாஸர் பத்து வருட காலம் சிறைவாசம் செய்ததைப் பற்றி நீ படித்திருக்கிறாயோ, இல்லையோ?" என்று எதிர் வீட்டிலிருந்து யாரோ கணீரென்று கேட்டதும், ராதைக்குத் தூக்கி வாரிப் போட்டது.

சட்டென்று திரும்பிப் பார்த்தாள். எதிர் வீட்டு ஜன்னலருகே நின்று கொண்டிருந்த ஒரு வாலிபன், புன்சிரிப்புடன் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் அவளுடைய முகம் கோபத்தினால் சிவந்தது.

ஜன்னலை விட்டுக் கீழே இறங்கினாள். கதவைப் படீரென்று மூடிக்கொண்டு உள்ளே போனாள். அப்பொழுதும் அந்த வாலிபன் கலகலவென்று சிரிக்கும் சத்தம் அவள் காதில் விழுந்தது.


அத்துடன் அது நின்று போகவில்லை; அன்று இரவு முழுவதும் திரும்பத் திரும்ப அந்த வாலிபனின் முகமும், கலகலவென்ற சிரிப்பொலியும் அவள் தூக்கத்தை மீண்டும் மீண்டும் கலைத்துக் கொண்டே யிருந்தன.

குளிர்ச்சி வாய்ந்தது
களைப்பாற்றுவது
வெப்பந்தணிப்பது



நறுமணங்கமழ்வது

வெப்பம் மிகுந்த நாட்களில் டாடாஸ் ஓ டி கொலோன் கொஞ்சமெடுத்து உங்கள் நெற்றியிலும் கழுத்திலும் பூசிக் கொள்ளுங்கள். ஜில்லென்றிருக்கும் அதன் குளிர் ஸ்பரிசம் உங்கள் அலுப்பையும் களைப்பையும் போக்கும். எவ்வளவு கடுமையான கோடையிலும் அது உங்களை எப்பொழுதும் உற்சாகத்துடன், நறுமணங்கமழ இருக்கச் செய்யும். தினசரி உபயோகத்திற்காக இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள்.



டாடாஸ்

ஓ டி கொலோன்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

'குருவிக் குடித்தனம்' என்பார்களே, அது போன்ற குடித்தனம்தான் ராதையினுடையது. வீட்டில் அவளுடைய அப்பா, தம்பி வேணு, அவள் உள்பட மூவர்தாம். இப்பொழுது அவளுக்குப் பதினாறு வயது. வேணுவுக்கு ஏழு வயது. செங்கம்பட்டியில் ராதையின் தந்தை அருணாசலய்யர் போஸ்ட் மாஸ்டர். ஏதோ கொஞ்சம் பூர்வீக சொத்து முண்டு. வீட்டில் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை. அநாவசியமான செலவுகள் ஒன்றுமில்லை. சிரமமில்லாமல் நடந்துகொண்டிருந்தது அவர்கள் குடும்பம்.

ராதையின் தந்தைக்குத் தற்சமயம் ஒரே ஒரு கவலைதான். அதாவது, தம் பெண்ணுக்கு வரப்போகும் கணவன், அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டால் தம்முடைய வீடு என்ன வாகு மென்பதுதான் அந்தக் கவலை. அதற்காக அவர், வலுவிலே வரும் வரன்களைக் கூட ஏதோ சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தார். என்ன இருந்தாலும் இந்த நிலைமை நெடுநாள் நீடிக்க முடியுமா, என்ன?

அன்று ஞாயிற்றுக் கிழமை. வீட்டு வேலைகளை யெல்லாம் சாவகாசமாகச் செய்து கொண்டிருந்தாள் ராதை. அருணாசலய்யர்



வீட்டில் இல்லை. ஊரிலிருந்து அவருடைய தங்கை அனுப்பி யிருந்த ஒரு வரனின் ஜாதகத்தையும், ராதையின் ஜாதகத்தையும் எடுத்துக்கொண்டு அவர் ஜோஸியர் வீட்டுக்குப் போயிருந்தார். வேணு வாசலில் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தான்.

மற்ற வேலைகளை யெல்லாம் ஒருவாறு முடித்துவிட்டுக் குத்து விளக்குக்குத் திரி போடுவதற்காகக் கையில் கொஞ்சம் பஞ்சை யெடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள் ராதை.

தற்செயலாக நிமிர்ந்து பார்த்தவள், தாழ்வாரத்தில் வழக்கமாகத் தொங்கும் கிளிக் கூண்டைக் காணாமலிருக்கவே திடுக்கிட்டாள். சட்டென்று கையிலிருந்த பஞ்சைக் கீழே போட்டுவிட்டு வாசலுக்குப் போனாள்.

“வேணு! அடே, வேணு! கிளிக்கூண்டு எங்கேடா?”

“எதிராத்து மாமா உன் கிளியைப் பார்க்கணும்னு கேட்டார், அக்கா! அதுக்காகச் சித்த முன்னேதான் கொண்டு போய்க் கொடுத்தேன்!”

ராதையின் முகம் சிவந்தது. நிமிர்ந்து எதிர்வீட்டு ஜன்னலைப் பார்த்தாள். “சீ, தடியா! போய் அதை உடனே வாங்கிக் கொண்டு வா!” என்று கோபத்தோடு சொல்லிவிட்டு உள்ளே வந்தாள்.

ஐந்து நிமிஷத்துக் கெல்லாம் கிளிக் கூண்டுடன் உள்ளே வந்த வேணு, ராதை தன்னை அடிப்பாளோ என்ற பயத்தினால், அதை அப்படியே வாசற் பக்கத்து நிலைப் படியண்டை வைத்துவிட்டு மீண்டும் தெருவுக்கு ஓடி விட்டான்.

ராதை கூண்டை எடுத்து வந்து தாழ்வாரத்துக் கொக்கியில் மாட்டினாள். பிறகு உள்ளே யிருந்த கிளியைப் பார்த்துக் கொண்டே சற்று நேரம் நின்றாள்.

“ஒரு கிளியைப் பத்து நாட்கள் கூண்டில் அடைத்து வைத்திருந்ததற்காக, மறு ஜன்மத்தில் மகா பக்தரான ராமதாஸர் பத்து வருட காலம் சிறைவாசம் செய்ததைப் பற்றி நீ படித்திருக்கிறாயோ, இல்லையோ?”

இவ்வார்த்தைகள் மீண்டும் ராதையின் நினைவுக்கு வந்தன. அதைத் தொடர்ந்து அந்த வாலிபனின் முகமும் கலீரென்ற சிரிப்பொலியும் அவளுடைய கவனத்துக்கு வரவே, அவள் முகம் குபீரென்று சிவந்தது.

இந்தச் சமயத்தில் கூண்டிலிருந்த கிளி, அவளை அரைக் கண்ணால் பார்த்தபடியே தன் தலையை ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டு, “கிருஷ்ணா! கிருஷ்ணா! ராதா! ராதா!” என்று கீச்சுக் குரலில் கத்த ஆரம்பித்தது!

திடுக்கிட்டுப் போனாள் ராதை. ஒரு நிமிஷத்துக் கெல்லாம் அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. எதிர் வீட்டிலிருக்கும் குறும்புக்கார வாலிபன், கிளிக்குத் தன்னுடைய பெயருடன் அவளுடைய பெயரையும் சேர்த்துச் சொல்லிக் கொடுத்திருக்கிறான் போலிருக்கிறது. அதற்காகத்தான் வேணுவிடம் கிளியைக் கொண்டு வரச் சொல்லி யிருக்கிறான்! என்ன போக்கிரித்தனம்!” என்று எண்ணியபொழுது ராதைக்குக் கோபம் பொங்கி வந்தது.

அவளுடைய கோபத்தை லட்சியம் பண்ணாமல், மீண்டும் மீண்டும், “கிருஷ்ணா! கிருஷ்ணா! ராதா! ராதா!” என்று அடித்தொண்டையிலிருந்து கீச்சிட்டது கிளி.

“அப்பா வரும்பொழுது இது இப்படிக் கூவிக் கொண்டிருந்தால் என்ன செய்வது? நான் சொல்லிக் கொடுத்தேனென்றல்லவா அவர் எண்ணிக் கொள்ளுவார்? அட கடவுளே! இதென்ன, பெரிய வெட்கக் கேடா யிருக்கிறதே!” என்று எண்ணியவாறு திகைத்து நின்றாள்.

நடை ரேழியில் ‘டக்டக்’கென்ற செருப்போசை. அதைத் தொடர்ந்து, “அம்மா, ராதை! இதோ பார்! எதிர்பார்க்காமல் கடிதம் வந்திருக்கு! அத்தை எழுதியிருக்கும் அந்த வரன் உள்ளூரிலேயே இருக்கிறானாம். இன்றைக்கு நாள் நன்றா யிருப்பதால் பெண்ணைப் பார்க்க வரச்சொல்லி யிருப்பதாக அவனுடைய அப்பா எழுதியிருக்கிறார். ஜோஸியர் வீட்டிலிருந்து வரும் வழியில் தான் தபால்காரன் கடிதத்தைக் கொடுத்தான். அப்படியே திரும்பிப் போய் வெற்றிலை, பாக்கு, பழம் எல்லாம் வாங்கிக் கொண்டு, வழியில் சேஷி மாமியையும் கண்டு ஆத்துக்கு உடனே வரச்சொல்லி விட்டு வந்தேன். இந்தா, இதை யெல்லாம் எடுத்து வைத்துவிட்டு, நீ போய்த் தலை பின்னி வேறே புடவை கட்டிக் கொள்ளு! சேஷி மாமி வந்தவுடனே காப்பியும் போட்டு, ஏதாவது பலகாரமும் தயார் பண்ணச் சொல்லு!” என்று சொல்லிக் கொண்டே, கையில் கொண்டு வந்தவைகளைக் கூடத்தில் வைத்துவிட்டுக் கைகால் அலம்பிக் கொள்வதற்காகக் கிணற்றடிக்குப் போனார் அருணாசலய்யர்.

கூடத்தில் பாயின்மேல் உட்கார்ந்திருந்தான் அந்த வாலிபன். எதிரே தட்டுக்களில் பலகாரமும் டம்ளரில் காப்பியும் வைக்கப்பட்டிருந்தன. செவிலி மாமி சமையலறை வாயிற்படியிலிருந்து அடிக்கடி தலையை வெளியே நீட்டி நீட்டி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சாப்பிடுங்களேன்! காப்பியும் பலகாரமும் ஆறிப்போகிறதே!" என்று உபசரித்தார் அருணாசலய்யர்.

பிறகு காமரா உள் பக்கம் திரும்பி, "அம்மா, ராதை! வெற்றிலை, பாக்கு, பழம் கொண்டு வா!" என்றார்.

புதுப் புடவை உடம்போடு ஒட்டி ஜிலு ஜிலுக்க, தலையிற் சூட்டி யிருந்த நித்திய மல்லிகைச் செண்டு கம்மென்ற மணம் வீச, வெட்கத்தால் சிவந்த கன்னங்களுடன் கையில் வெற்றிலைத் தட்டை ஏந்திக் கொண்டு தலை குனிந்தபடி வெளியே வந்தாள் ராதை.

இந்தச் சமயத்தில் சொல்லி வைத்தாற் போல் அந்தப் பாழாய்ப் போன கிளி, "கிருஷ்ணா! கிருஷ்ணா!—ராதா! ராதா!" என்று கூவ ஆரம்பித்து விட்டது.

திடுக்கிட்டுத் திரும்பிய ராதையின் முகத்தில் குபுகுபுவெனச் செம்பேறிட்டது.

கூடத்தில் உட்கார்ந்திருந்த வாலிபன் அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரிக்கலானான். அந்தச் சிரிப்பொலியைக் கேட்டு மீண்டும் திடுக்கிட்ட ராதை, அவனை ஒரு முறை ஏறிட்டு நோக்கினாள். அவள் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்து விட்டன. அப்படியே அவனை விழுங்கி விடுபவள் போல் பார்த்தாள்.

அதே சமயத்தில் பம்பரமும் கையுமாக உள்ளே வந்த வேணு, "யாரு? எதிராத்து மாமாவா?" என்று கேட்டுக் கொண்டே, சுவாதீனமாக அந்த வாலிபனின் மடியில் போய் உட்கார்ந்து கொண்டான். அருணாசலய்யர் ஒன்றும் விளங்காமல் திகைத்தார்.

"இவர்தான் அப்பா, கிருஷ்ணமூர்த்தி மாமா! எதிராத்திலே யிருக்கார்!" என்று விஷயத்தைச் சுருக்கச் சொல்லி விளக்க வைத்தான் வேணு.

வாலிபன் மீண்டும் சிரித்தான். அவனுடைய கடைக் கண்கள் ராதையை நோக்கின. இதற்குள் எல்லாவற்றையும் ஊகித்துக் கொண்ட அருணாசலய்யரும் அவனுடன் சேர்ந்து சிரிக்கலானார்.

ராதைக்கும் சிரிப்பு வந்துவிட்டமையால், அதை மறைப்பதற்காக அவள் விடுவிடு வென்று உள்ளே போய்விட்டாள்.

✶

அன்று வைசாக பூர்ணிமை. பாலைப் பெய்ததுபோல் இயற்கை ஜிலு ஜிலுப்பாய் ஒளிர்ந்தது.

வேணு தூங்கிப் போய் விட்டான். அருணாசலய்யர் ராமாயணம் கேட்பதற்காகக் கோயிலுக்குப் போயிருந்தார்.


முற்றத்தின் நிலவொளியில் ராதையும் கிருஷ்ணனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். "நீங்கள் செய்த காரியம் உங்களுக்கே நன்றாயிருந்ததா?" என்று கேட்டாள் ராதை.

"என், என்ன செய்து விட்டேன்?" என்று ஏதும் அறியாதவன் போல் கேட்டான் கிருஷ்ணன்.

"அந்தக் கிளிக்குப் போய் உங்கள் பெயரோடு என்னுடைய பெயரையும் சேர்த்துச் சொல்லிக் கொடுத்து அனுப்பினீர்களே, யாருக்காவது தெரிந்தால் ......?"

"பெரிய பிரமாதமாகும்?...'கிருஷ்ணா! ராதா!'......இவ்வளவுதானே?" என்று சொல்லிச் சிரித்தான் கிருஷ்ணமூர்த்தி.

"ஓஹோ! இது கிளிவிடு தூதோ!" என்றவாறு ராதையும் அவனுடைய சிரிப்பில் கலந்து கொண்டாள்.



"ஐயையோ, இது என்ன அக்கிரமம்! சப் இன்ஸ்பெக்டரு என் சீண்டப் பிடிச்சு திருத்துட்டு வச்சு கொண்டிருக்கிறீங்களே, என்னைப் பற்றி நல்லாத் தெரிந்திருந்தும் சீண்டப் பிடிச்சு நிறுத்திட்டு பார்த்து நோக்கி யிருக்காரே, இந்தக் கஷ்டகாலம்!"



ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கியமுடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த, ஆன்டி ஸெப்டிக்கும், குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்த்து, மலினங்களை அகற்றி சுத்தம்செய்து சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சருமசுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்ய மேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப்பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டி ஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினுலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப்பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவயவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு, மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.




RP. 30-23 TM

REXONA PROPRIETARY LIMITED

திலக் மார்க் மிஸ்கி பெருங்காயத்தையே உபயோகியுங்கள்

GOPALJI CHAMPSHI & Co

MADRAS & MADURA



ஹெட் ஆபீஸ்: பம்பாய். :: பிராஞ்சு: 11, சாயக்கரத் தெரு, மதுரை.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்


கோபால்ஜி சாம்ப்ஷி & கோ.,

பெருங்காயம் & கற்பூர வியாபாரிகள்,

30, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதருஸ், ஜி. டி.

'ஆஸ்ப்ரோ'

இதோ வந்துவிட்டது!



போலிகளை வாங்காதீர்கள். ஒவ்வொரு வில்லையின்மேலும் 'ஆஸ்ப்ரோ' என்ற வார்த்தை இருப்பதைக் கவனிக்கவும்

'ஆஸ்ப்ரோ' வலியையும் ஜுரத்தையும் 10 நிமிஷங்களில் போக்கும். இருதயத்துக்காவது வயிற்றுக்காவது கெடுதி செய்யாது



'ஆஸ்ப்ரோ'

கட்டுப்பாடு செய்யப்பட்ட வில்லைகள்:

3 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 1 அணா

30 வில்லைகள் கொண்ட பாக்கட் . . . 10 அணா

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

'ஆஸ்ப்ரோ'

எங்கும் கிடைக்கும்.

[illegible]



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI மார்ச் 23, 1947

4 அணா

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு



பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்

அருண

கர்பாசயரோக நிவாரணி



ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக் முறைப்படி தவறாமல் உபயோகித்தால், ஆரோக்கியத்தை விருத்திசெய்து, வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய்யும்

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
தி-நகர . . . . மதராஸ

EASTERNS 376

நீண்ட கருத்த கூந்தல் வளர



கோகுல் ஹேர் ஆயில்

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். & கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்
கும்பகோணம்

மதராஸ் விடு ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும்
சோல ஏஜண்டு :

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே !



ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திர ஜில்லாக்கள் தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேஜாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை

ஒரு குறிப்பு



பரீக்ஷித்துப் பாருங்கள்...எழுதிப் பாருங்கள்......ஆஹா, என்ன மூனை !....வைரத்தைப் போன்று நீடித்த உழைப்பும், வெல்வெட் மாதிரி மழமழப்பாக எழுதவும் கூடியது. புத்திசாலித்தனமாக சந்தர்ப்பத்தை இழக்காமல் இன்றே ஒரு மென்ட்மோர் வாங்குக.

வியாபார நிபந்தனைகளுக்கு மேற்கண்ட பூரண உரிமையாளர்களுக்கு எழுதவும்:

முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்.

குவீன்ஸ் மான்ஷன்ஸ், பான்டியன் ரோடு
பம்பாய்

REGD. No. M. 4392

